Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
T.P - 0212225969
E-Mail - tilkojaffna@gmail.com
Hotline 0212229497
Web - www.Cityhoteljaffna.com
(C/2967)

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 4 செவ்வாய்க்கிழமை (20.08.2013) பக்கங்கள் 20 ஓசை - 324

05 சக்கடத்தார்



10 இரகசியம்



18 ஆரோக்கியம்



## கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது

### தமிழக கட்சிகள் வலியுறுத்தல்

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என நேற்றைய தினம் மாநிலங்களவையில் அ.தி.மு.க.வும், தி.மு.க. கட்சிகளும் ஒரு சேர வலியுறுத்தியுள்ளன.

மாநிலங்களவையில், இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் இந்திய வருகை குறித்து அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் கேள்வி எழுப்பின. அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் மைத்ரேயன், கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாதென வலியுறுத்தி பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 2 கடிதங்களை எழுதியிருப்பதாகவும், அதற்குப் பிரதமரிடம் இருந்து எந்தவொரு பதிலும் வரவில்லை என்றும் கூறினார்.

மேலும் அவர், பிரதமர் இதற்கு எப்படி பதில் அளிக்கப்போகிறார் என்பதை அறிய தமிழக மக்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதமர் பிரதிபலிக்கப் போகிறாரா அல்லது இலங்கைக்கு சாதகமாக இருக்கப் போகிறாரா என கேள்வி எழுப்பினார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போன சிறுவன் நல்லூரில் கண்டுபிடிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ். கரவெட்டி கரணவாய் பகுதியில் காணாமற்போன 13 வயதுடைய சிறுவனை மீட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் தெரிவித்தார்.

16 ஆம் கட்டை கரவெட்டி கரணவாய் பகுதியைச் சேர்ந்த கருணாநிதி நிலக்ஷன் (வயது-13) என்ற சிறுவன் கடந்த 10 ஆம் திகதி காணாமற்போனதாக

(19) ஆம் பக்கம் பார்க்க

## 13 இல் கை வைப்பதனை அனுமதிக்காது இந்தியா



### துணைத் தூதுவர் மகாலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை திருத்தக் கூடாது என்பதே இந்தியாவின் நிலைப்பாடு. அதனையே இந்தியத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்படுவதனை இந்தியா பார்த்துக் கொண்டிருக்காது

(19) ஆம் பக்கம் பார்க்க

# மூன்றாம் கட்டப்போர் குறித்து விக்னேஸ்வரன் விளக்க வேண்டும்

## அமைச்சர் சிறிசேன கோரிக்கை



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபைக்கான முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் ஆரம்பிக்கப் போவதாக எச்சரித்துள்ள மூன்றாம் கட்டப் போர் குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மெல்சிறிபுரவில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய போது,

விடுதலைப் புலிகளை அரசாங்கம் தோற்கடித்துள்ள போதிலும், வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலரும் பிரிவினை மீது நம்பிக்கை வைத்து தீவிரமாகச் செயற்படுகின்றனர்.

இந்தநிலையில், விக்னேஸ்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பக்கச்சார்பற்ற அறிக்கை சமர்ப்பிப்பார் நவிப்பிள்ளை

### அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையின் செப்ரெம்பர் கூட்டத் தொடரில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நடுநிலையான - பாரபட்சமற்ற அறிக்கையை சமர்ப்பிப்பார் என்று அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு இது குறித்துத் தகவல் வெளியிட்டுள்ள ஜனாதிபதியின் மனிதஉரிமைகள் விவகாரங்களுக்கான தூதுவரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க, நவநீதம்பிள்ளையின் பயணத்தை அரசாங்கம் சாதகமாக எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்து 4 ஆண்டுகளின் பின்னர், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நல்லிணக்க முயற்சிகளின் முன்னேற்றத்தை நவநீதம்பிள்ளையினால் நேரில் காணமுடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 13 ஐ பலவீனமாக்கும் முயற்சி; புதுடில்லி கடும் எதிர்ப்பு



(புதுடில்லி)

13ஆவது திருத்தச் சட்டத்தை பலவீனப்படுத்துவதில்லை என்பதில் இலங்கை உறுதியான நிலைப்பாட்டை எடுப்பதுடன், அதனை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமெனவும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நேற்றைய தினம் இந்தியப் பிரதமரைச் சந்தித்த வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் மாநாட்டுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் அழைப்பிதழைக் கையளிக்கும் போதே பிரதமர் மன்மோகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக இருவரும் பேச்சு நடத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பில் புதுடில்லிக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசமும் கலந்து கொண்டார்.

இதன்போது, கொமன்வெல்த் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்ததற்கு, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம், இந்தியப் பிரதமர் நன்றியைத் தெரிவித்துக் கொண்டதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இந்தச் சந்திப்பின் போது, வடக்கு மாகாணசபைத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சியில் ஈழத்தமிழர்களுக்கு பாதுகாப்பு



### ஞானதேசிகன் தெரிவிப்பு

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் தாம் பாதுகாப்பாக இருப்பதாக, ஈழத்தமிழர்கள் கூறுவதாக இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ் மாநில தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.

சுதந்திரப் போராட்ட தியாகி சத்தியமூர்த்தி மற்றும் காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் ஜி.கே.மூப்பனார் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை சத்தியமூர்த்தி

(19) ஆம் பக்கம் பார்க்க

## உள்நாட்டு பிரச்சினையைத் தீர்க்க வெளிநாட்டில் பேசிப் பயனில்லை

### கூறுகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

'எமது நாட்டின் பிரச்சினைகளை நாமே பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும். மாறாக இந்தியாவிலும், கனடாவிலும் மற்றும் பிறநாடுகளிலும் சென்று பேசுவதால் எவ்விதமான பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. எனவே எமது உள்நாட்டுப் பிரச்சினையைப் பேசித்தீர்க்க வேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# பாரம் அதிகம்; தூரம் அதிகமில்லை

# இணைந்து பயணித்தால் வெற்றி நிச்சயம்

## எதிர்ப்பு அரசியலை நிராகரிப்போம் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



எம் இனிய தமிழ்பேசும் மக்களே!... நேசமுடன் உங்களுக்கு வணக்கம்!...

எது இங்கு நடந்து முடிந்திருந்தாலும், தமிழ்பேசும் மக்கள் தோற்றுப்போனவர்கள் அல்ல....

இந்த உண்மையை சகலருக்கும் உணர்த்த, எமது சொந்த மண்ணில் முழுமையாக நீங்கள் நிமிர்ந்தெழும் காலம் நெருங்கிவருகிறது...

உங்களுக்காக நாம் சுமக்கும் பாரம் அதிகம். ஆனாலும் செல்லவேண்டிய உங்கள் இலக்கின் தூரம் அதிகமில்லை.

நாம் நடந்து வந்த பாதையில், கடந்து வந்த சவால்களுக்கு மத்தியிலும், உங்களை விட்டு எங்கும் விலகி ஓடிவிடாமல், உங்களுடனேயே இருந்து வந்திருக்கிறோம்.

உங்களை உசுப்பேற்றி, அவலங்களை உங்கள் மீது சுமத்திவிட்டு ஓடிப்போனவர்கள், இன்றைய சுமுகமான சூழ்நிலையிலும், தேர்தல் காலங்களிலும் மட்டுமே உங்களிடம் வந்து நிற்பார்கள். நீங்கள் அவலப்படும் போது அவர்கள் இங்குவந்து நிற்கவில்லை. உங்களது துயர்களை துடைக்கவும் இல்லை.

உரிமை என்பது வெறுமனே அரசியலுரிமை மட்டுமல்ல. தமது வரலாற்று வாழ்விடங்களில் மக்கள் மீள்குடியேறவேண்டும். வாழ்வாதார வசதிகளை அனுபவித்து மகிழவேண்டும். தொழில் துறைகளில் மக்கள் தடையின்றி ஈடுபடவேண்டும். வறுமையில் இருந்து மீட்சி பெற வேண்டும்.

விவசாயம், கடற்றொழில், பனை தென்னை வளம், வேலைவாய்ப்பு, சுகாதாரம், மின்சார வசதி, கல்வி, சுத்தமான குடிநீர், போக்குவரத்து, வர்த்தகம் சிறந்த சிவில் நிர்வாகம் என சகல துறைகளிலும் எமது மக்கள் நிமிர்ந்தெழ வேண்டும்.

இவைகளையே நாம் இதுவரை ஒய்வு உறக்கமின்றி எமது அரசியல் பலத்திற்கு ஏற்ற வகையில் செய்து வந்திருக்கிறோம். மத்திய அரசில் நாம் எமது மக்களின் பிரதிநிதிகளாக பங்கெடுத்து வருவதால் மட்டுமே இவைகளை எம்மால் சாதிக்க முடிந்திருக்கிறது.

நாம் சாதித்தவைகளில் சிறு துளியை கூட தேர்தலுக்காக மட்டும் தமிழ்த்தேசியம் பேசி, போலியான எதிர்ப்பு அரசியல் நடத்துபவர்கள் எவரும் இங்கு செய்திருக்கவில்லை. நெஞ்சில் உரமும், நேர்மை சிறிதும் இல்லா நடிப்புச் சுதேசிகளின் வஞ்சகம் அல்லவா இது.

மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை எமது கையில் நீங்கள் வழங்கும் போது, நாம் இது வரை செய்து வந்த சேவைகளையும், தேவைகளையும் முழு நிறைவாக செய்துமுடிப்போம்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நிஜமாக்கி மாகாணசபை ஆட்சியை பலப்படுத்தி, வளர்த்தெடுப்பதன் மூலமே எமது அரசியல் இலக்கை நோக்கி நாம் செல்லமுடியும்.

இதை நாம் நீண்ட காலமாகவே வலியுறுத்தி வந்திருக்கின்றோம். நடிப்புச் சுதேசிகள் கடந்த கால்நூற்றாண்டுகளாக 13 ஆவது திருத்தத்தை எதிர்த்தே வந்திருக்கிறார்கள். மாகாணசபை உரிமைகளை அருவருப்பாக அணுகியவர்கள் தேர்தல் என்றவுடன் பதவி நாற்காலிகளுக்காக தேடி வந்திருக்கிறார்கள்.

எம்முடன் இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பும் 13 ஆவது திருத்தத்தை அன்றே ஆதரித்திருந்தால் நாம சுயாட்சியை நோக்கி சென்றிருப்போம். எமது மக்கள் வலிகளை சுமந்திருக்க வேண்டிய அவலங்களும் இங்கு நடந்திருக்காது.

அரைகுறை தீர்வு என்றும், உழுத்துப்போன தீர்வு என்றும் கூறி இதுவரை கிடைத்த அனைத்து தீர்வுகளையும் ஒதுக்கி வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்,

வலிகளை உங்கள் மீது சுமக்க வைத்தார்கள். சுயாட்சியை நோக்கி நீங்கள் செல்லும் வழிகளை தோற்கடித்தார்கள்.

இது தமிழ்த் தேசியம் அல்ல. மாறாக மக்களின் வாக்குகளை அபகரிக்கும் வெறும் தேர்தல் கால வெற்றுக்கோசம் மட்டுமே.

தமிழ்த் தேசியத்தைப் பாதுகாப்பவர்களாக இருந்திருந்தால், எம்மை போல் அவர்களும் மக்களுடன் வாழ்ந்திருக்க வேண்டும். உங்கள் துயரங்களில் பங்கெடுத்திருக்க வேண்டும். உங்கள் நிலங்களை மீட்டுக்கொடுத்திருக்க வேண்டும். எமது தேசத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்ற உழைத்திருக்க வேண்டும்.

அர்த்தமற்ற பாசாங்கான எதிர்ப்பு அரசியல் எதையும் பெற்றுத்தராது. தமிழ்த் தேசியத்தின் நியாயமான அபிலாசைகளைத் துளியளவும் பாதுகாக்காது.

சாணக்கிய தந்திர மதிநுட்ப சிந்தனை வழி நின்று அரசாங்கத்தை இணங்க வைத்துப் பேசியே எதையும் நாம் பெறமுடியும். இன்று எமக்கிருக்கும் கடமை மாகாண சபையின் அதிகாரங்களைப் பாதுகாப்பதும், அதை பலப்படுத்துவதும், எமது அரசியல் இலக்கை நோக்கி செல்வதுமே ஆகும். இதை அரசுடனான நல்லிணக்க உறவின் மூலமே சாதிக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையிடமோ, அன்றி சர்வதேச நாடுகளிடமோ முறையிடுவதாகக் கூறி எம்தேச மக்களை ஏமாற்றும் மாய மந்திரங்கள் ஒருபோதும் பலிக்காது.

அவ்வாறு முறையிட்டு அழுவதால் முன்னேற்றகரமாக எதுவும் நடக்கப் போவதும் இல்லை. இது எம்தேச மக்களை மறுபடியும் நரகப் படுகுழி நோக்கி தள்ளவே வழிவகுக்கும்.

சர்வதேச நாடுகளுக்கு எம் மீது அக்கறை இருந்திருந்தால் எமது மக்களை அழிவு யுத்தம் முள்ளி வாய்க்கால் வரை அள்ளி சென்றபோது சர்வதேசம் இங்கு அவலம் தீர்க்க வந்திருக்க வேண்டும். எல்லாம் நடந்து முடிந்த பின்னரே சகலரும் இங்கு வந்தார்கள்.

ஆகவே சர்வதேச சமூகத்திற்கு ஒற்றுமையை காட்டுங்கள் என்று கூறும் வழமையான தேர்தல் கால ஏமாற்று கோசங்களை நம்பிவிடாதீர்கள்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலின் போதும் சர்வதேச சமூகத்திற்கு ஒற்றுமையின் பலத்தை காட்ட வாக்களியுங்கள் என்று கோசமிட்டனர்.

உள்ளூர் மக்களுக்கு தம் இதயத்தை திறந்து காட்டாதவர்கள் சர்வதேச சமூகத்தின் மீது பாசாங்காக நேசம் கொண்டிருப்பது போல் நடிப்பது தமது சொந்த பந்த குடும்ப நலன்களுக்காகவே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருந்த உள்ளூராட்சி சபைகள் செயலிழந்து சோர்ந்து கிடக்கின்றன. உள்ளூராட்சி சபைகளையே நடத்த முடியாமல் திண்டாடுபவர்கள் மாகாணசபையை எப்படி எமது மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்றவாறு நடத்தப்போகிறார்கள்?...

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போக நினைப்பது போல் உள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனவு.

நாம் வெற்றிபெற்ற உள்ளூராட்சி சபைகள் மட்டுமே அதிக நிதி வளங்களோடு அபிவிருத்தியை நோக்கி செயற்பட்டு வருகின்றன. இதற்கு காரணம் நாம் எமது மக்களின் பிரதிநிதிகளாக இருந்து உரிமைக்கு குரல் கொடுத்து, அரசாங்கத்தின் உறவுக்கு கரம் கொடுத்து வருகின்ற எமது ஆக்கபூர்வ இணக்க வழிமுறையே ஆகும்.

என்றும் மக்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், மக்களின் அன்றாட துயர்களை துடைப்பவர்கள். அபிவிருத்தியால் எம் தேசத்தை தூக்கி நிறுத்துபவர்கள், அரசியல் தீர்வுக்கு கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்துபவர்கள், இருப்பதை பாதுகாத்து, இன்னும் பெற வேண்டிய உரிமையை பெறுபவர்கள். வெற்று வீரம் பேசாது, மதிநுட்ப சிந்தனையில் செயற்படுபவர்கள், இவர்களே மக்களின் நண்பர்கள்! மக்களுக்கு மீட்சி கொடுப்பவர்கள்!

ஆகவே எமக்கே வாக்களியுங்கள். அரசியல் அதிகாரத்தை எம்மிடம் தாருங்கள். மாகாண சபையை பலப்படுத்துவோம். உங்கள் இலட்சிய கனவுகளை நிறைவேற்றுவோம்.

நாம் செல்லும் பயணம் வெல்லும்.

மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி!

எங்கள் வெற்றி என்பது உங்களின் வெற்றியே!

உங்கள் எதிர்காலத்தின் வெற்றியே!!

என்றும் உங்கள் மத்தியில் இருக்கும் எனறு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவமனை இன்னும் ஏன் இல்லை?

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் ஆயுர்வேத மருத்துவ மனை இல்லாததால் ஆயுர்வேத வைத்தியம் சம்பந்தமான நோயாளர் பெரும் அல்லல் படுவதைக் காணமுடிகிறது.

குறிப்பாக வயோதிபர், வாதம், நோவு போன்ற வைத்தியத்திற்குப் பழைய முறைப்படி ஆயுர்வேத மருத்துவமனையை நாடிச் செல்கின்றனர். தற்போது இப்பகுதி மக்கள் சுமார் பல மைல் தூரம் சென்று மந்திகை (சிலையடிக்கு) அருகாமையில் உள்ள மருத்துவமனைக்குச் சென்றுவருகின்றனர்.

வரணிப் பிரதேசத்தில் ஒரு மருத்துவமனை அமைந்தால் இப்பகுதி மக்களுக்கு பெரும் நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(150)

# யாழ். குடாவின் நீர்வளம் இன்றைய நிலா முற்றத்தில்

யாழ். குடாநாட்டின் நீர்வளமும் எதிர்காலமும் என்ற தொனிப் பொருளில் நிலாமுற்றம் - 17 என்ற நிகழ்வு இன்று மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை இல. 128, பிறவுன் வீதியில் உள்ள Nation Popular Travels & Tours இன் திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய தொழில் வங்கி முகாமையாளர் ந.சத்தியசீலன் யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரையாளர் கலாநிதி திருமதி துஷ்யந்தினி மிகுந்தன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். இந் நிகழ்விற்கு ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூகவியலாளர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் கருத்துரை வழங்குவார்கள்.

# வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்திட்டம்

(கிளிநொச்சி)

பெண்களைக் குடும்பத் தலைவராகக் கொண்டவர்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக சேவைகள் அமைச்சினால் சுயதொழில் திட்டத்தின் கீழ் நிதி தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது. மிக அண்மையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 7 பயனாளிகளுக்கு இந்த நிதி நன்கொடை கிடைத்துள்ளது.

பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் எடுத்த நடவடிக்கையின் பயனாக இந்த நிதி ஒதுக்கீட்டை சமூகசேவைகள் அமைச்சு அனுப்பிவைத்துள்ளது.

பிரதேச செயலகப் பிரிவின் சமூகசேவைகள் அலுவலர் பிரதேச செயலரின் பணிப்பின் பேரில் கிராம அலுவலர்களுடன் இணைந்து இத்திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்திருந்தார். தெரிவு செய்யப்பட்ட 35 பயனாளிகளது விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்க பிரதேச செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பாடசாலை செல்லும் வறிய மாணவர்களைக் கொண்ட தனி ஒரு பெற்றோரைக் கொண்ட குடும்பங்களுக்கு இச் சுயதொழில் நன்கொடையை சமூகசேவைகள் அமைச்சு வழங்கி வருகின்றது.

கணவன் இறந்த பெண்கள் கணவனது மரணச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். கணவனால் கைவிடப்பட்டவர்களும் சமாதான நீதிவானின் சத்தியக் கூற்றைச் சமர்ப்பித்து விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். அதேபோல மனைவி இறந்த ஆண் ஒருவரும் மனைவியின் மரணச் சான்றிதழைச் சமர்ப்பித்து விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் விண்ணப்பதாரி பாடசாலை செல்லும் தமது பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழின் போட்டோ பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். தமது தேவை குறித்து கடிதம் எழுதி தமது பிரிவின் கிராம அலுவலரின் சிபாரிசையும் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கால்நடை வளர்ப்பு, சிறுகடை போன்ற சுயதொழில்களை விடுத்து சாத்தியமான கைத்தொழில்களை செய்வோருக்கு நிதியளிப்பில் முன்னுரிமை வழங்குவதை அமைச்சு ஊக்குவித்து வருவதையும் காணமுடிகிறது.

பாடசாலை மாணவர்களைக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதன் ஊடாக மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

அமைச்சின் இத் திட்டத்தில் அதிகமான பயனாளிகள் இணைந்து நன்மையைப் பெற்று மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்த முடியு மெனவும் தெரிவிக்கப்படுகிறது.

### தீர்த்தத்திருவிழா

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு வீரபத்திரர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது. (11)

# சந்நிதியானுக்கு இன்று இரதோற்சவம்
# பக்தர்களுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி


(வடமராட்சி)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

அன்னதானக்கந்தன் என வர்ணிக்கப்படும் செல்வச் சந்நிதி முருகன் ஆலய இரதோற்சவத்திற்கு யாழ் குடாநாடு மட்டுமல்லாது பிறமாவட்டங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்கின்றனர்.

அந்தவகையில் ஆலயத்திற்கு வரும்அடியார்கள் சந்நிதிக்கந்தனை சிரமமின்றி வழிபடுவதற்கு ஏதுவாக சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பருத் தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தெரிவித் துள்ளார். இதன்படி அடியார்களின் நன்மைகருதி சுகாதரா வசதிகள் குடிநீர் வசதிகள் மேலதிகமாக

## பருத்தித்துறை பிரதேச செயலர்

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைவிட குற்றச்செயல்கள் மற்றும் திருட்டுகள் இடம்பெறுவதை தடுக்கும் வகையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.

அத்துடன் நீதி அமைச்சின் அனுமதியுடன் இயங்கு நீதிமன்றம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நாளை வரை 3 தினங்கள் செயற்படவுள்ளது. இதன்மூலம் குற்றச்செயல்களுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கப்பட வுள்ளது.


மேலும் போக்குவரத்து வசதிகளாக யாழ்ப்பாணத் திலிருந்து செல்வச்சந்நிதிக்கென விசேட அரச பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை வலிகாமம் பகுதி மக்களுக்கென விசேட பேருந்து சேவை சுன்னாகத்திலிருந்தும் யாழ்ப்பாணத் திலிருந்தும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.மேலும் ஆலயத்திற்கு வரும் அனைத்து அடியார்களுக்கும் அன்னதானம் வழங்கும் வகையில் சந்நதியான் ஆச்சிரமம்,மணியம்மடம் உள்ளிட்ட சகல மடங்களிலும் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

எனவே ஆலயத்திற்குவரும் அடியார்கள் சிரமமின்றி கந்தனை வழிபட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆலய தீர்த்த உற்சவம் நாளை புதன்கிழமை காலை 6மணிக்கும் மௌனத்திருவிழா மாலை 6 மணிக்கும் இடம் பெறவுள்ளது. (116)

# நல்லைக் கந்தனுக்கு இன்று ஒன்பதாம் திருவிழா



### முத்துக்குமரனே!

முத்துக்குமரனே முருகனே! மாயோன் மருகனே!
மூதாட்டி ஔவை பாடிய முருகனே! சண்முகனே!
சித்தமது இரங்கியே சிங்காரக் காட்சிதரும்
சிங்கார வேலனே! சிவனார்திருமகனே!
பக்தியுடன் உனது பாதமலர் பணிந்தோம் ஐயா
பரமபதமளித்து விரத பலனளித்து-நீ
முத்திப்பேறளித்தே முழுநிலவென ஒளிவீசி
சித்திதரவேண்டும் சிங்கார முருகனே
சரணம்! சரணம்!

கலாபூசணம்
இராசையா ஸ்ரீதரன்

# சுரக்கும ஓய்வூதியத் திட்டத்திற்கு பயனாளிகளை இணைக்கும் திட்டம்

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஒய்வூதிய திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக பயனாளிகள் ஆர்வத்துடன் இணைந்து கொள்கின்றனர். சுரக்கும திட்டத்திலேயே இவ்வாறு அதிக பயனாளிகள் ஆர்வத்துடன் இணைந்து வருவதைக் காண முடிகிறது.

அரசாங்க அதிபரின் வழிகாட்டலின் கீழ் இவ் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தில் இது வரை 372 பேர் இத் திட்டத்தில் சேர்ந்து உள்ளனர்.

கடந்த வியாழக்கிழமையன்று வட்டக்கச்சியிலும் , இராமநாதபுரத்திலும் புதிய பயனாளிகளை இணைப் பதற்கான நடமாடும் சேவை உரிய கிராம அலுவலர் களின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது. இதற்கான ஏற்பாட்டை கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் ஏற்பாடு செய்திருந்தார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பொன்னகர் கிராம அலுவலர் பிரிவிலும் , அதே தினம் காலை 10. 30 மணிக்கு மலையாளபுரம கிராம அலுவலர் பிரிவிலும் நடமாடும் சேவை நடத்தப்பட உள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் தொடர்ச்சியாக நடமாடும் சேவையை நடத்த பிரதேச செயலர் கிராம அலுவலர்கள் மூலமாக ஏற்பாடுகளைச் செய்துள்ளார். பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் இதற்கான ஒருங்கிணைப்பாளராக செயற்படுகின்றார்.

கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவிலும் இத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயலர் த. முகுந்தன் கிராம அலுவலர்கள் மூலமாக நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் சு.ஜெயானந்தராஜா பிரதேச செயலரின் பணிப்பின் பேரில் நடமாடும் சேவைகளை கிராம அலுவலர்க ளுடன் இணைந்து ஒழுங்கமைத்து வருகின்றார். (90)



## மாடுகளுக்கு தடுப்பூசி

வரணிப் பிரதேசத்தில் மாடுகளுக்கு நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டுவருகிறது.

மாட்டு உரிமையாளர்கள் தமது மாடுகளை கட்டி வைத்து விட்டு தெரியப்படுத்தினால் அவரவர் வீடுகளுக்குச் சென்று சுலபமாக தடுப்பூசியை போட்டுக் கொள்ள முடியுமென மிருக வைத்தியர் தெரிவித்துள்ளார். (150)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார திணைக்களத்தால் தினமும் மாலை 3 மணியளவில் ஆன்மிக நிகழ்வு கள் நடைபெற்று வருகின்றன. நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் 9 ஆம் திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை மஷோற்சவம் உணர்த்தும் ஐந்தொழில் தத்துவம் என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் கந்த சத்தியதாஸன், சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து சித்தங்கேணி சிவசக்தி, மருதனார் மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர்,சங்கானை நிச்சாமம் ஞான வைரவர் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத் தும் தெய்வீக இசையரங்கம் தினமும் மாலை 6.45 மணக்கு நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் நடை பெற்று வருகிறது. இதில் இன்று சி.விக்னேஸ்வரன் திருமதி எஸ்.விஜயலட்சுமி ஆகியோரின் பாட்டு, இசையரங்கம், பக்கவாத்திய கலைஞர்கள் சகிதம் இடம்பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ப்ரம்மகான சபா நடாத்தும் தெய்வீக இசைச்சங்கம நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் காலாவித்திருமதி குமுதா உமாகந்தனின் பாட்டு இடம்பெறவுள்ளது. (42, 06)

# வீதிக்கு விடிவு கிட்டுமா?


(வரணி)

வடமராட்சி மாலுசந்தியில் இருந்து வியாபாரி மூலை கடற்கரைச்சந்திவரை பிரயாணம் செய்யும் வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப் படுகிறது.

இந்த வீதியில் பிரசித்திபெற்ற ஆலயங்கள் தேவாலயம் மற்றும் தனியார் மருத்துவமனைகள் கிராம அலுவலர் பிரிவுகள் போன்ற முக்கிய செயலகங்கள் இயங்கும் நிலையில் இந்த வீதி கவனிப்பாரற்று காணப்படுவது கவலையளிப்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை அல்வாய் சேச் அருகில் உள்ள பாலம் வாகனங்கள் பயணிக்க முடியாதவாறு இருப்பதும் வாகன உரிமையாளர்கள் இக்கட்டான ஒரு சூழலில் வாக னங்களை செலுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது.

எனவே குறித்த வீதி மற்றும் பாலத்தை புனரமைக்க உரியவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என பொதுமக்கள கேட்டுக்கொண்டுள்ளனர். (150)



மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு அச் சங்கம் பல இலட்சம் ரூபா செலவில் எரிபொருள் நிரப்ப வரும் வாகனங்களுக்கு காற்று நிரப்புவதற்கு புதிய காற்று நிரப்பி இயந்திரமொன்றை கொள்வனவு செய்துள்ளது. (104)

# தெல்லிப்பளை வைத்தியசாலை பிரதான வாயிலில் கழிவுநீர்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை வைத்தியசாலையின பிரதான வாயிலை அண்டிய பகுதியில் கழிவு நீர் தேங்கி நிற்பதாலும் வைத் தியசாலைக்கு செல்லும் நோயாளர் கள், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆதார வைத்தியசாலையின் பிரதான வைத்தியசாலை அருகிலே வைத்தியசாலை சிற்றுண்டிச் சாலை காணப்படுவதால் உணவகத் தில் இருந்து அகற்றப்படும் கழிவு நீரும் இவ்வடிகால் பகுதியில் தேங்கி நிற்பது குறிப்பிடத்தக்கது.

உரியவர்கள் நடவடிக்கை எடுப்பதன மூலம் பொதுமக்கள், நோயாளர்களின் அசௌகரியம் நீக்கப்படும் என பொதுமக்கள் தெரி விக்கின்றனர் (66)

மகோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்



நாம் செய்ய வேண்டிய காரியங்களைத் தவறாமல் செய்து வந்தால் நமக்குச் சேரவேண்டியவை தாமாக வந்து சேரும்.

- சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## அரதப் பழசான உத்தி!

சனிப்பெயர்ச்சி பற்றி சுகிசிவம் தனது ஆன்மீகப் பேருரையில் ஒரு வேடிக்கைக் கதையைக் கூறியிருப்பார். திருமணமான புதில் காதல் மனைவியை அழைத்துக் கொண்டு முதன்முதலாகக் கோயிலுக்குப் போகிறான் கணவன். வழியில் மனைவியின் காலில் ஒரு முள் குத்திவிடுகிறது. அது தன்னுடைய கண்ணில் குத்தியதாகத் துடித்துப் போய் கதறுகிறான்.

“சே, சனியனே! என் மனைவி காலிலா குத்துவாய்?” என்று கூறி முள்ளை எடுத்து எறிகிறான். ஆறேழு வருடங்கள் கழிந்தன. அதே கோயிலுக்கு தன் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு மனைவியுடன் செல்கிறான். அப்போது முள் மனைவியின் காலில் குத்திவிட்டது. அவள் “ஓ”வென கதறுகிறாள்.

உடனே கணவன், “ஏய் சனியனே! முள் இருக்கும் என தெரியும் அல்லவா... பார்த்து வரக்கூடாதா?” என்கிறான். ஆறு ஆண்டுகளுக்கு முன் முள்ளில் இருந்த சனி, அதாவது அன்று முள்ளை சனி என்றான். இன்று அந்த சனி மனைவிக்கு இடம் மாறிவிட்டது. மனைவி சனியாகிவிட்டாள். இதுவும் சனிப்பெயர்ச்சி தான் என்று சொன்னார் அவர்.

அப்படி ஒரு பெயர்ச்சியை குடாநாட்டுப் பத்திரிகைகள் விஷயத்திலும் காணமுடிகிறது. தேர்தல் அறிவிப்பு வந்துவிட்டால், “கூட்டமைப்பு வேட்பாளர்களை இராணுவம் மிரட்டல்”, “கூட்டமைப்பு ஆதரவாளர் மீது தாக்குதல்”, “கூட்டமைப்புக்கு வாக்களிக்க நினைத்திருந்தவரை பொலிசார் அழைத்துச் சென்று விசாரிப்பு”, கூட்டமைப்பின் ஆதரவாளரோடு பேசிக்கொண்டிருந்தவருக்கு எச்சரிக்கை”... என்றெல்லாம் உணர்ச்சிகரத் தலைப்புகளில் முன்பு வேறொரு குடாநாட்டுப் பத்திரிகை செய்திகளை அள்ளி விட்டுக் கொண்டிருந்தது.

இப்போது அந்தப் பத்திரிகை அடக்கி வாசிக்கிறது; அத்தகைய உணர்ச்சியாவேசத் தலைப்புகளெல்லாம் இப்போது வேறொரு பத்திரிகைக்கு இடம் மாறியிருக்கிறது. செப்டெம்பர் 21 வரை குடாநாட்டு மக்கள் ஒரு அதி பயங்கரத்திற்குள் வாழ்ந்துகொண்டிருப்பதான உணர்வை ஊட்டிவிட அந்தப் பத்திரிகை துடிக்கும் துடிப்பை ஒவ்வொரு பக்கத்திலும் பார்க்க முடிகிறது.

அத்தகைய தாக்குதல் அல்லது மிரட்டல், குறைந்தபட்சம் பொலிசார் யாரையேனும் நிறுத்தி விசாரித்த ஒரு செய்தியையாவது அனுப்ப முடியாத செய்தியாளர்கள் இனமான உணர்ச்சி குறைந்தவர்கள் என்று தங்களைத் தாங்களே கருதிக்கொண்டு அவஸ்தையுறுவார்கள் போலிருக்கிறது. கிட்னியை எடுப்பதற்கு ஆட்களைத் துரத்தித் திரியும் வடிவேலு படக் காமெடி போல இவர்களும் தாக்குதல், மிரட்டல் செய்திகளை துரத்தித் துரத்திக் கைநீட்டி அழைத்துக்கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

தேர்தல் வெற்றிக்காக அலையை உருவாக்கும் மற்றொரு உத்தி இது. மக்களைப் பயமுறுத்திக்கொண்டே இருப்பது. வடக்கு முழுவதும் வன்முறை தலைவிரித்தாடுகிறது; உங்களுக்கும் அடி விழப்போகிறது என்ற அச்சத்தைப் பெரிதாக ஏற்படுத்தி, அரச எதிர்ப்பு அலையை ஓங்கியெழச் செய்தால் வாக்குகளைச் சுருட்டலாம் என்ற அவர்களது அரதப்பழசான உத்தி இது.

இந்த அச்சுறுத்தலைப் பிரமாண்டமாக்கிக் காட்டிக் கொண்டிருந்தால் போதும். மாகாணசபையை வென்று மக்களுக்கு என்ன செய்வீர்கள் என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்பாடே வராது. அந்தக் கதைகளை விட்டுட்டு, முதலில் இந்த அரசைத் தோற்கடிக்க வாக்களியுங்கள் என்று மக்களை உணர்ச்சியலையில் ஏமாற வைத்துவிடலாம் என்பது அவர்கள் கணிப்பு.

ஆனால், எப்போதும் மக்களை ஒரே மாதிரியே ஏமாற்றிக் கொண்டிருக்க முடியுமா என்ன?

- ஆசிரியர்

# நகைப்பிற்குரியதாக மாறிவிட்ட கூட்டமைப்பினரின் கோரிக்கைகள்

## தினேஸ் குணவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்தகால சம்பவங்கள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக் குழுக்களை நியமிக்கும்போது அவற்றை கடுமையாக விமர்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு கோரி க்கை விடுப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நியமிக்க மிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவை கூட்டமைப்பினர் விமர்சிப்பதும் நகைப்புக்குரியதாக உள்ளது.

சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு விட்டதும் அவற்றை விமர்சிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு, பின்னர் அந்த ஆணைக்குழுக்கள் முன்வைக்கும பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு கோருவது வழக்கமாகிவிட்டது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு விவகாரங்கள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களை கூட்டமைப்பினர் விமர்சித்தே வந்தனர். கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு நியமிக்கப்பட்டதும் அதனை தமிழ்க் கூட்டமைப்பினர் கடுமையாக விமர்சித்தனர்.

பின்னர் நல்லிணக்க ஆணைக குழு பரிந்துரைகளை வெளியிட்டதும் அவற்றை நிறைவேற்றுமாறு கூட்டமைப்பினர் வலியுறுத்த ஆரம்பித்தனர். அந்த வகையிலேயே தற்போது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவையும் விமர்சிக்கின்றனர்.

இவர்களின் செயற்பாடுகள் வேடிக்கையாகவே உள்ளன.

எவ்வாறெனினும் கூட்டமைப்பினரின் செயற்பாடுகளை பார்க்கும்போது அவர்கள் சில நோக்கங்களுடன் செயற்படு கின்றமை தெளிவாகின்றது. அதாவது வடக்கில் இடம்பெறும் அபிவிருத்திகளை தடுத்து அங்குள்ள அமைதியை கெடுத்து விடுவதன் ஊடாக அரசாங்கத்தின் பக்கம் இருக்கும் மக்களை தம் பக்கம் வளைப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

அடுத்ததாக எப்போதும் வெளிநாடுகளுக்கு முறைப்பாடுகளை செய்வதனையே நோக்கமாகக்கொண்டுள்ளனர். மேலும் வெளிநாடுகளில் செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைகளை நிறைவேற்றுவதையும் நோக்கமாகக்கொண்டுள்ளனர்.

இந்தத் தரப்பினர் இலங்கை மீது நம்பிக்கை வைக்காமல் வெளிநாடுகளில் நம்பிக்கை வைத்ததன் விளைவையே கடந்த 30 வருடங்களாக நாடு அனுபவித்தது.

அதேபோன்ற செயற்பாடுகளைக் கூட்டமைப்பினர் தற்போதும் மேற்கொள்ள முயற்சிப்பது கவலைக்குரிய விடயமாகும்.எனவே அவ்வாறான அரசியலை தமிழ்க் கூட்டமைப்பினர் முன்னெடுக்காது புதிய அரசியல் கலாசாரத்தின் ஊடாக மக்களின் தேவைகளை நிறைவேற்றிப் பயணிக்க முன்வர வேண்டும்.

வடக்கின் அபிவிருத்திப் பயணத்தை தடுக்க கூட்டமைப்பினர் முயற்சிக்கக்கூடாது. சர்வதேசத்தில் பொய்ப்பிரசாரங்களை செய்யக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

# பொன்ரேறா உற்பத்தி பொருட்களுக்கான விநியோகத்தடை மேலும் நீடிப்பு

(கொழும்பு)

பொன்ரேறா உற்பத்தி பொருட்களை விநியோகிப்பதற்கும் விற்பதற்கும் விதிக்கப்பட்டுள்ள தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்ட நீதிமன்றமே பொன்ரேறா நிறுவன உற்பத்திப் பொருட்களை தடைச்செய்யும் கட்டளையை கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறப்பித்துள்ளது.

இந்தத் தடையையே மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நீடித்துள்ளது. செப்ரெம்பர் 3 ஆம் திகதி வரையே இந்தத் தடையுத்தரவு நீடிக்கப்படடுள்ளதாக நீதிமன்றம அறிவித்துள்ளது.

அரச தாதியர் சங்கம் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு உட்படுத்திய போதே நீதிமன்றம் மேற்கண்ட உத்தரவைப்பிறப்பித்திருந்தது.

அதுமட்டுமன்றி பொன்ரேறா நிறுவன உற்பத்திகள் தொடர்பில விளம்பரம் செய்வது மக்களைத் தவறாக வழிநடத்தும் செயற்பாடாகும் என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியிருந்தது.

பொன்ரேறா உற்பத்தி பொருட்களில் டீ.சி.டீ. இரசாயனம கலந்துள்ளது கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# எதுவித தேர்தல் வன்முறைகளும் இதுவரை இடம்பெறவில்லை

## வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி சன்ன அபேரத்ன

வவுனியாவில் வன்முறைகள் எதுவுமின்றி அமைதியாக இருக்கிறது, இதுவரை எதுவிதமான தேர்தல் வன்முறை களும் இடம்பெறவில்லை என்று வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சி. டி.கே.சன்ன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

கபே அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேர்தல் கள நிலைவரங்களை ஆராயும் ஊடகவியலாளர்கள் குழு வவுனியா நிலைமைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் வவுனியா பொலிஸ் நிலையம் சென்றிருந்த போது வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆகக் கூடுதலாக 1700 பொலிஸாரைத் தன்னகத்தே கொண்டு இயங்கும் வவுனியா பொலிஸ் நிர்வாகப் பிரிவில் இதுவரை தேர்தல் தொடர்பான வன்முறைகள் எதுவும் எந்தத் தரப்பினராலும் மேற்கொள்ளப்படவில்லை.

தனது பதவிக் காலத்தில் தான் உள்ளூராட்சி, மாகாண சபை, நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் உட்பட 13 தேர்தல்களை நாட்டின் பல்வேறு பாகங்களில் சந்தித்திருக்கின்றேன்.

பாரிய தேர்தல் வன்முறைகளின்றி சுமுகமாக நடத்தி முடிப்பதற்கு தான் சட்டமும் ஒழுங்கையும் கடுமையாக அமுல்படுத்தி அர்ப்பணிப்போடு கடமையாற்றியுள்ளேன்.

வவுனியா நகரத்தில் அபேட்சகர்கள் பதாகைகள் எதனையும் பொருத்துவதற்கு அனுமதியளிக்கவில்லை. ஏற்கனவே வவுனியா நகரில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளரால் பொருத்தப்பட்டிருந்த பதாகை ஒன்று தனது உத்தரவின் பேரில் அகற்றப்பட்டு விட்டது.

வடமாகாண மக்கள் சந்திக்கும் முதலாவது மாகாண சபைத் தேர்தல் இதுவென்பதால் தான் மிகவும் கடமைப் பொறுப்புடன் தேர்தல் சட்ட விதி முறைகளையும், நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் அமுல்படுத்துவதற்கும் திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

தேர்தல் பிரசாரங்களின் போது ஏற்படக் கூடிய எந்தக் கட்சியினரின் குறைநிறைகளையும் செவிசாய்த்துக் கேட்பதற்கும். அதற்குரிய பரிகாரங்களைக் காண்பதற்கும் தான் எந்நேரமும் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைப் பிரஜைகளிடம் இத்தாலியில் மோசடி

இத்தாலியில் இலங்கைப் பிரஜைகளிடம் 14 ஆயிரத்து 400 யூரோ மோசடி செய்யப்பட்டுள்ளது. இத்தாலியின் மெஸ்ஷினா நகரில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் ஊழியர் ஒருவர் போலியான விமானப் பயணச்சீட்டுகளை வழஙகியுள்ளார்.

இதனால் விமான நிலையத்திற்குச் சென்ற 20 இலங்கைப் பிரஜைகள் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டதாக தெரியவருகிறது.

சம்பந்தப்பட்ட விமான நிறுவனத்தின் ஊழியர் 20 போலி விமான பயணச்சீட்டுகளைக் கொடுத்து பணத்தை அறவிட்டுள்ளார்.

ஒரு பயணச்சீட்டுக்கு 720 யூரோக்கள் அறவிடப்பட்டுள்ளதுடன் மொத்தமாக 14 ஆயிரத்து 400 யூரோக்கள் அறவிடப்பட்டுள்ளது.

இந்தப் பயணச்சீட்டுகளுடன் இலங்கைக்கு செல்வதற்காக விமான நிலையத்திற்குச் சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

ஏற்கனவே கடந்த ஏப்ரல் மாதம் 30 இலங்கைப் பிரஜைகளிடம் இவ்வாறான பயணச்சீட்டு மோசடி மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சகடமுனியின் விகடசங்கடம்



# எல்லாரும் ஏறி விழுந்த குதிரையில சக்கடத்தாரும் ஏறுகிறாரா?

■ முனிதாசபூதன்

**குமாஸ்த்தாமுனி:-** குருவே! முன்னாள் நீதியரசர் விக்கினேஸ்வரனே முதலமைச்சர் வேட்பாளர் என தமிழரசுக்கட்சிக்காரர்கள் அறிவித்த நேரம் தொடக்கம் அவர் அரச படைகள் தொடர்பாகவும் 13வது அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாகவும் பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் கருத்துக்களையும் அடுத்தடுத்து வெளியிட்டுள்ளார். அதையெல்லாம் ஒரு பட்டியல் போட்டு உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன் குருவே.

**சகடமுனி:-** நல்லது! குமாஸ்த்தா! கூறு பார்க்கலாம்

**குமாஸ்த்தாமுனி:-**

1. வடக்கு கிழக்கில் உள்ள அரச படைகள் முகாம்களுக்குள் முடக்கப்பட வேண்டும்

2. வடக்கு கிழக்கில் உள்ள இராணுவத்தினரின் படை அளவு குறைக்கப்பட வேண்டும்

3. இராணுவத்தினர் மக்களின் அன்றாட விவகாரங்களில் தலை யிடுவது நிறுத்தப்பட வேண்டும்

4. வடக்கு கிழக்கின் அரச சிவில் நிர்வாகங்களில் இராணுவத்தினர் தலையிடுவது நிறுத்தப்பட வேண்டும்.

5. மாகாண சபைகளின் ஆளுநராக இராணுவ அதிகாரிகளை நியமிக்கக் கூடாது

இவற்றோடு 13வது அரசியல் யாப்பு திருத்தத்தில் உள்ள அதிகாரப் பகிர்வுகள் தொடர்பாக:

6. மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரங்களெல்லாம் ஆளுநருக்கே வழக்கப்பட்டுள்ளன. அதனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாகாண சபை அர்த்தமற்றதாக ஆக்கப்பட்டுள்ளது

7. ஆளுநரின் முன்அனுமதியும் பின் அனுமதியும் இல்லாமல் மாகாணசபைகள் சட்டங்கள் எதையும் ஆக்க முடியாத அளவுக்கு மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரங்கள் அவற்றின் ஆளுநருக்கு உட்பட்டவையாகவே ஆக்கப்பட்டுள்ளன.

8. மாகாணத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் மாகாண அபிவிருத்திகளுக்கு அவசியமான நிலங்கள் மீதான அதிகாரங்கள் இல்லாவிடின் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு அர்த்தமற்ற ஒன்றாகும்.

**கழுதைமுனி:-** குருவே! நம்ம குமாஸ்த்தா அடுக்கியிருக்கிறவைகளைப் பார்த்தால் நீதவான் விக்கினேஸ்வரன் சொல்லியுள்ளவற்றில் என்ன பிழைகள் உள்ளன குருவே!

**சகடமுனி:-** அவர் அடுத்தடுத்து 13வது அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாக வெளியிட்டுள்ள விமர்சனங்களும் அரச படைகள் தொடர்பாக அவர் கேட்பவைகளும் முழுமையாக சரியானவைகள் என்றோ சாத்தியமானவைகள் என்றோ இல்லாவிட்டாலும் அவை அர்த்தமற்றவை என்றோ அல்லது அவசியமற்றவை என்றோ புறக்கணிக்க முடியாது. இவை பற்றி அரசாங்கம் மிகவும் அக்கறையோடு கவனத்திற் கொள்ள வேண்டியதுவும் ஆவன செய்ய வேண்டியதுவும் அவசியமே. இவை தொடர்பாக தமிழ்த் தலைவர்கள் தமக்கிடையே உள்ள கட்சி பேதங்களுக்கு அப்பால் ஜனாதிபதியுடனும் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவான மற்றும் ஒத்துழைக்கக் கூடிய அமைச்சர்களுடனும் எதிர்க்கட்சித் தலைவர்கள் பிரமுகர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதும் அவசியமானவையே. அத்தோடு அனைத்து இன அறிவு ஜீவிகளையும் சமயத் தலைவர்களையும் சந்தித்து தமது கோரிக்கைகளில் உள்ள நியாயங்களை எடுத்துக் கூறி ஆதரவு திரட்ட வேண்டும். சிங்கள இனவாதிகள் செய்யும் பிரச்சாரங்கள் சரியானவையல்ல என பெரும்பான்மையான சிங்கள மக்களும் உணரும் வகையில் பரஸ்பர நம்பிக்கைகளை ஏற்படுத்தும் பிரச்சாரங்க்ளை சிங்களத் தலைவர்களோடு இணைந்து மேற்கொள்ள வேண்டும். இவையெல்லாம் அவசியமானவைகளே மேற்கொள்ளப்பட வேண்டியவைகளே. ஆனால் நல்ல சரியான முயற்சிகளை விட்டு விட்டு குறுக்கு வழியில் சுருக்கமான முறையில் தாங்கள் நினைப்பதை முடித்து விடும் அவாவில், சிங்கள மக்களை மிரள வைக்கும் நோக்கில் முழங்குவதிலும் தமிழர்களை மீண்டும் அரசியற் கனவுலகில் சஞ்சரிக்க விடுகின்ற வகையில் உசுப்பேத்தும் வீரவசனங்களை சினிமாப் பாணியில் வெளியிடுவதிலும் திரு. விக்கினேஸ்வரனும் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் கிளிநொச்சி சிறீதரன் கூட்டத்தாரோடு இணைந்திருப்பது போல எனக்குத் தெரிகிறது. அதுதான் எனக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்துகிறது.



**சரியான முயற்சிகளை விட்டுவிட்டு குறுக்கு வழியில் சுருக்கமான முறையில் தாங்கள் நினைப்பதை முடித்துவிடும் அவாவில், சிங்கள மக்களை மிரள வைக்கும் நோக்கில் முழங்குவதிலும் தமிழர்களை மீண்டும் அரசியற் கனவுலகில் சஞ்சரிக்க விடுகின்ற வகையில் உசுப்பேத்தும் வீரவசனங்களை சினிமாப் பாணியில் வெளியிடுவதிலும் திரு. விக்கினேஸ்வரனும் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் கிளிநொச்சி சிறீதரன் கூட்டத்தாரோடு இணைந்திருப்பது போலத் தெரிகிறது.**

**கழுதைமுனி:-** குருவே! உங்களுக்கு இவ்வாறு பெரும் சங்கடத்தை உண்டு பண்ணும் விதமாக நீதியரசர் விக்கினேஸ்வரன் அப்படி என்னதான் சொல்லுகிறார்.

**சகடமுனி:-** அட கழுதை முனியே! வடக்கு கிழக்கில் உள்ள இராணுவ பிரசன்னம் இராணுவ தலையீடுகள் பற்றி திரு. கனக. விஸ்வ. விக்கினேஸ்வரன் கூறியவை பற்றியல்ல எனது சங்கடங்கள். அவர் தான் சொன்னவற்றிற்கெல்லாம் முடி சூட்டுவது போல ஒரு வசனம் சொல்லியிருக்கிறார் பாரு. அது எனது மண்டையை மட்டும் குழப்பவில்லை. என்னுடைய அடி வயித்தையும் கலக்குது.

**கழுதைமுனி:-** குருவே! நீதவான் விக்கினேஸ்வரன் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி என்று அவரைப்பற்றி நல்லூர் தேரடியிலே கடலை கச்சானோட குந்தியிருக்கிற பக்தர்கள் எல்லாரும் சொல்லுகினம். அப்படியான அவர் உங்களையே சங்கடப்படுத்திற மாதிரி என்னதான் கூறியிருக்கிறார் குருவே!.

**சகடமுனி:-** அட மண்டுகமே! அவர் மூன்றாம் கட்ட போராட்டம் நடத்தப் போகிறாராம். திரு செல்வநாயகம் திரு அமிர்தலிங்கம் ஆக்கள் தமிழர் போராட்டத்தில் ஒரு காண்டம் நடத்தினவையாம். பிறகு பிரபாகரன் நாலு கட்டப் போர்கள் கொண்ட இரண்டாம் போராட்ட காண்டத்தை நடாத்தினவராம். அதெல்லாம் தமிழர்களுக்கு ஒரு பிரயோசனமும் தரவில்லையாம். அதனால, கௌரவ விக்கினேஸ்வரன் மாகாண சபை முதல்வர் ஆனபிறகு மூன்றாம் போராட்ட காண்டத்தை நடத்தப் போறாராம். அதுக்கு இந்தியாவும் சர்வதேச சமூகங்களும் ஆதரவு தரும் என்றும் கூறுகிறார். தனக்கு அரசியல் தெரியாது. தான் அரசியலுக்காக மாகாணசபைக்கு வரவில்லை என்று சொன்னதோட கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் சீரழிந்து கிடக்கும் அனைத்துப் பகுதி மக்களின் வாழ்வையும் வடக்கின் சமூக பொருளாதார கட்டுமானங்களை கட்டியெழுப்பும் சேவைகளைச் செய்வதற்கான ஒரு மக்கள் சேவகனாகவே மாகாண சபைக்கு வருவதாகக் கூறினார். இப்ப பார்த்தால் சம்பந்தர், மாவை சேனாதிராஜா, சுரே' பிரேமச்சந்திரன் ஆகியோரும் கூட அசரும் வகையில் சவால்கள் சங்கநாதங்களை முழங்குகிறார். அவை தமிழர்களை முள்ளிவாய்க்காலில் கொண்டு போய் விட்டனர். இவர் தமிழர்களை எந்த வாய்க்காலில் கொண்டு போய் விடப் போகிறார் என்றுதான் தெரியவில்லை. இதெல்லாம் சொந்த அறிவு அனுபவத்திலிருந்து சொல்கிறாரா அல்லது நடக்காததற்குத்தான் நாண்டு நிற்போம் என்று வக்கிரம் பிடித்துப் போய் உலவும் தமிழீழத் தேசவாதிகளின் குரலாக வெளிக்கிட்டிருக்கிறாரா என்றுதான் புரியவில்லை. எல்லாரும் ஏறி விழுந்த குதிரையில சக்கடத்தாரும் ஏறினாராம் என்ற கதையைத்தான் இவரும் தொடர முற்படுகிறாரா என்பதுதான் புரியவில்லை.

**நீதவான், வடக்கின் சமூக பொருளாதார கட்டுமானங்களை கட்டியெழுப்பும் சேவைகளைச் செய்வதற்கான ஒரு மக்கள் சேவகனாகவே மாகாண சபைக்கு வருவதாகக் கூறினார். இப்ப பார்த்தால் சம்பந்தர், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் கூட அசரும் வகையில் சவால்கள் சங்கநாதங்களை முழங்குகிறார். அவர்கள் தமிழர்களை முள்ளி வாய்க்காலில் கொண்டு போய்விட்டனர். இவர் தமிழர்களை எந்த வாய்க்காலில் கொண்டு போய் விடப்போகிறார் என்றுதான் தெரியவில்லை.**

1977ஆம் ஆண்டு உதயசூரியனுக்கு தமிழர்கள் எல்லாரும் தவறாமல் வாக்குப் போட்டால் தமிழீழம் மலரும் என்றும் மரம் பழுத்தால் வௌவால்கள் வரும் என்றும் கூவி வாக்குகளுக்கு அழைப்பு விட்ட பழுத்த அரசியல்வாதிகளைக் கொண்ட தமிழர் கூட்டணியினர் நடத்திய தேர்தல் மேடை நாடகத்தைப் போல இப்போது திரு கனக. விஸ்வ. விக்கினேஸ்வரனும் ஒரு தேர்தல் நாடகத்தை தனது பாணியில் நடத்த முற்படுகிறாரா என்ற கேள்வியே எனது தலையை நிறைத்த சங்கடமாகி நிற்கிறது.

# வங்கிகளை தனியார் மயமாக்க திட்டமிடுகிறது அரசாங்கம்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் வங்கியை தனியார் மயமாக்குவதற்கான அனைத்துத் திட்டங்களையும் அரசாங்கம் தயாரித்துள்ளது. இலங்கை வங்கிக்கும் தேசிய சேமிப்பு வஙகிக்கும் இதேகதி நேரலாம். வெலி வேரியாவில் மூடப்பட்ட தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதை நிர்வாகத்தினர் நிறுத்தியுள்ளனர்.

ராஜகிரியவிலுள்ள தேசிய தோட்டத் தொழிலாளர் ஊழியர் சங்க கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேசிய ஊழியர் சங்கத் தலைவரும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நஷ்டத்தில் இயங்கும் நிறு வனங்களை பராமரிப்பதற்காக அரச வங்கிகளில் அரசாங்கம் பெரும் தொகை பணத்தை கடனாகப் பெற்றுள்ளது. அது மட்டுமல்லாது அரசின் வீண்விரயங்களுக்கும் கடன்பெற்றுள்ளது.

நாடாளுமன்றத்தினதோ, நிதிக் குழுவினதோ அங்கீகாரம் இன்றி அமைச்சர்களின் திட்டங்களுக்கும் அரச வங்கியில் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ச தனது அமைச்சின் திட்டங்களுக்காக ஒவ்வொரு அரச வங்கியிடமிருந்தும் ரூபா ஒரு பில்லியன் வீதம் கடன்பெற்றுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு அரசாங்கத்தின் பிழையான நிதிக்கொள்ளைகள் காரணமாக அரச வங்கிகள் வீழ்ச்சியைக் கண்டுள்ளன.

எனவே, அரசாங்கம் தற்போது மக்கள் வங்கியை தனியார் மயமாக்குவதற்கு திட்டங்களை தயாரித்துள்ளது. எதிர்காலத்தில் இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கியும் தனியார் மயமாக்கப்படும் ஆபத்து இருக்கின்றது.

தேசிய ஊழியர் சங்கத்தின் அங்கத்தவர்கள் அரச நிறுவனங்களில் பழிவாங்கப்படுகின்றனர். ஊவா மாகாணத்தில் இலங்கை போக்குவரத்து சபையில் தொழில புரியும் உறுப்பினர்கள் மூவர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான பழிவாங்கல் கள் நடவடிக்கைகளை அரசாங்கம் கைவிட வேண்டும். உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளுக்காக எமது குரல் தொடர்ந்து ஒலிக்கும். உரிமைகள் வழங்கப் படாவிட்டால் போராட்டங்கள் வெடிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டங்களை தயாரிப்போர் ஆட்டோவில் பணிபுரிய வேண்டும்

(கொழும்பு)

முச்சக்கரவண்டிகள் மணித்தியாலத்திற்கு ஒரு கிலோமீற்றர் எனும் வேகத்தில் பயணிக்க வேண்டும் எனின் அதனை விட நடந்து செல்வது சிறந்தது என அகில இலங்கை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் சங்கத்தின் பிரதம செயலாளர் பத்மசிறி சுனில் சாந்த தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம் இன்று பிபிலையில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆகக் கூடிய வேகத்தில் பயணிக்கக் கூடிய வகையிலேயே வாகனங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன, ஆகக் குறைந்தது முச்சக்கரவண்டி சங்கங்களின் பிரநிதிகளுக்கு இது தொடர்பில் அறிவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து புதிய சட்டங்களை தயாரிப்போருக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம் ஒரு நாளைக்கு முச்சக்கரவண்டியில் பணியாற்றுங்கள். அதன் போது சாரதிகள் எதிர்நோக்கும் துயரங்கள் புரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வாயால் கழற்றிய மீன் தொண்டைக்குள் சிக்கியது

## குடும்பஸ்தர் மரணம்

வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் வலையில் அகப்பட்ட மீனை வாயால் கழற்ற முனைந்த வேளை மீன் வாய்க்குள் சென்று பொறுத்துக் கொண்டதால் அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் உள்ள விரவில வாவியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், வாய்க்குள் பொறுத்த மீனை வெளியே எடுப்பதற்கு கிராம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பெற்று வந்த மீனவர் சிகிச்சையில் பலனின்றி உயிரிழந்தார்.

அம்பாந்தோட்டை சிரிபோபுரவில் வசித்து வந்த 28 வயது மொஹமட் பாயிஸ் எனும் ஒரு குழந்தையின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வாயினுள் உள்ளே சென்ற மீன் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த போதே இவர் உயிரிழந்துள்ளதாக அம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜனசக்தி நிறுவனத்தின் மூலம் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப தளம்



(கொழும்பு)

வாடிக்கையாளர்களின் சௌகரியம் மற்றும் செயற்திறனை அதிகரிக்கும் நோக்கில் ஜனசக்தி நிறுவனத்தின் மூலம் ஒருங்கிணைந்த தகவல் தொழில் நுட்ப தளம் (integrated IT platform) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இத் தளமானது அனைத்து பங்குதாரர்களினதும் காப்புறுதி பயன்பாட்டினை (insurance applications) சீராக்குகிறது. இந் நிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிளை வலையமைப்பானது ஒரே தளமாக இணைக்கப்பட்டுள்ளதனால் வாடிக்கையாளர்கள மற்றும் பணியாளர்களிற்கு எவ்வித தடையின்றி தகவல்களை பயன்படுத்துவதற்கும், பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கும் வழிவகுக்கிறது.

இநதத் தகவல் தொழில்நுட்ப தளமானது உற்பத்தி திறன் மற்றும் செயற்திறனை அதிகரிப்பதுடன், வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் நன்மையளிக்கக்கூடிய வகையில் குறைந்த கடதாசி பயன்பாட்டு கொண்ட வர்த்தக செயல் முறையை உருவாக்குகிறது.

எமது பங்குதாரர்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு பொருந்தும வகையிலான சிறந்த தீர்வுகள் உள்ளடங்கிய வகையிலான தளத்தை உருவாக்கிய எமது தகவல் தொழில் நுட்ப குழுவிற்கே அனைத்து கீரத்தியும் சென்றடைய வேண்டும்.

விசேடமாக, எமது வாடிக்கையாளர்களின் சரியான தேவைகளை பூர்த்தி செய்ய முடிந்ததுடன், எமது சேவைகளின் அனைத்து அம்சங்களையும் ஒன்றிணைக்க முடிந்தது என ஜனசக்தி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரகாஷா.்.ப்ட்டர் தெரிவித்தார்.

# பெற்றோர் கவனத்திற்கு
# சிறுவனின் உயிர் பறித்த தொலைக்காட்சி நிகழ்வு

(கொழும்பு)

தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒன்றை பார்த்த பின்னர், அந்த தொலைக்காட்சியில் இடம் பெற்ற சம்பவத்தை போல் செய்து பார்த்த 11 வயது முஸ்லிம் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காலி டக்கியவத்தை பகுதியில் இடம் பெற்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பார்த்த சம்பவத்தை போல் இந்தச் சிறுவன் செய்து பார்த்துள்ளார்.

உயிரிழந்த சிறுவனின் தாய் வெளிநாட்டில் தொழில் புரிந்து வருகிறார். சம்பவம் நடந்த போது தந்தை வேலைக்கு சென்றிருந்தாகவும் வீட்டில் சகோதரனும் உயிரிழந்த சிறுவனுமே இருந்துள்ளனர்.

ரம்ழான் மாதத்தில் முஸ்லிம் குடும்பங்களின் வீடுகளில் சிறுவர்கள் விளையாடுவதற்காக ஊஞ்சல் அமைக்கப்படுவது வழக்கம்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்த சிறுவன் கதிரை ஒன்றை வைத்து ஊஞ்சல் மீது ஏறி அதில் இருந்த சேலை துண்டை கழுத்தில் இட்டுக் கொண்டு குதித்துள்ளார். அந்த சேலை சிறுவனின் கழுத்தை இறுக்கியதில் இந்த மரணம் சம்பவித்துள்ளது.

# இரண்டு தங்கப்பதக்கங்கள்





(கொழும்பு)

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) வழங்கும் வருடாந்த தேசிய விற்பனை காங்கிரஸ் (NASCO) விருதுகளில் செலிங்கோ லை.'.ப் நிறுவன பிரதிநிதிகள் இருவர் தமக்குரிய பிரிவுகளில் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

விற்பனைத் துறையில் ஈடுபடடுள்ளவர்களின் ஆற்றல்களை அங்கீகரித்து அவர்களுக்கு வெகுமதிகளை வழங்கி விற் பனைத் துறையில் மேலும் அவர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் பிரதான மானதோர் நிகழ்வே இந்த விழாவாகும்.

இந்த விருது வழங்கும் விழாவில் செலிங்கோ லை.'.ப்பின் மொறட்டுவை கிளை 1 ஐச் சேர்ந்த C.N.S. பெர்ணான்டோ காப்புறுதிப் பிரிவில் Front Liner வகைப் படுத்தலில் தங்கப் பதக்கத்தை வென்றார்.

கொழும்பு வடக்கு -1 கிளையைச் சேர்ந்த S.தர்ஷன் விற்பனை நிறைவேற்று அதிகாரி பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்றார்.

# மறுமலர்ச்சிக் கண்காட்சி



(கொழும்பு)

கிழக்கின் மறுமலர்ச்சி எனும் தொனிப்பொருளிலான விவசாய கைத்தொழில் கண்காட்சி இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டிலான இந்தக் கண்காட்சி ஏறாவூர் றூஹமானியா வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் ஆரிவதி கலபதி, மாகாண அமைச்சர்களான ஷாபீஸ் நசீர் அஷமட், எம்.எஸ்.உதுமாலெவ்வை, எம.ஐ.மன்சூர் மற்றும் மாகாண பிரதம செயலாளர் எஸ்.அபேகோன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அங்கவீனமுற்றோருக்கான செயலகத்தால் பயனாளிகளுக்கு சுயதொழில் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ,கரைச்சி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகம் சுயதொழில் நன்கொடையை அனுப்பி வைத்துள்ளது.

தலா 25,000 ரூபா வீதம் சுய தொழில் நன்கொடை கிடைத்துள்ளது.பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் இவர்களுக்குரிய கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவினர் இவர்களுக்குரிய கொடுப்பனவை வழங்க பயனாளிகளிற்கு தகவலை வழங்கி உள்ளனர்.

சுயதொழில் செய்யத் தகுதியான மாற்றுவலுவுள்ளோர் அனைவருக்கும் சுயதொழில் நன்கொடையைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் பிரதேச செயலர் ஈடுபட்டுள்ளார்.

தகுதியான ஒருவர் தான் விரும்பும் சுயதொழிலைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் ஒன்றை எழுதி கையொப்பமிட்டு அதில் தாம் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பம் என்ற சிபாரிசைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பின்னர் அரச வைத்திய சாலையில் பெற்ற மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்துடன் பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு சுயதொழில் நன்கொடைக் கொடுப்பனவுக்குரிய படிவத்தைப் பூரணப்படுத்துதல் வேண்டும்.பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் பிரதேச செயலாளரின் சிபாரிசைப் பெற்றபின் கொழும்பிலுள்ள அமைச்சிற்கு அனுப்பி வைப்பார்கள்.

கோழி, ஆடு, மாடு வளர்ப்பு, சிறுகடை போன்ற சுயதொழில்களைத் தவிர்த்து பிற சுயதொழில்களை குறிப்பிடுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கி நிதியை அமைச்சு விரைவாக அனுப்பி வருகிறது.சிறுகைத்தொழில் முயற்சிகளை ஊக்குவித்து நிதியை வழங்க அமைச்சு முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# பாடசாலை மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கல்



வெலி ஓயா பிரதேசத்தில் கல்வி கற்கும், அத்தியாவசிய தேவைகளையுடைய பாடசாலை மாணவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வொன்று வெலி ஓயா சம்பத் நுவர மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர நாமல் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தார்கள்.

வறுமை கோட்டிற்கு கீழ் இருக்கும் மாணவர்களின் கல்விக்காக மாதாந்தம் ஊக்கத்தொகையாக இந்நிதி உதவி வழங்கப்படுகின்றது. மாணவர்களின் குடும்பப் பொருளாதாரம் மற்றும் தரம் ஆகியவற்றைப் பொறுத்து அவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகையானது வேறுபடுகின்றது.

இந்நிகழ்வில் அரசாங்க உயர் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# நாகதோஷத்தினால் ஏற்படும் துன்பங்களும் பரிகாரங்களும்

நவகிரகங்கள் ஒன்பதில் இராகு,கேது என்பன ஒருவர் ஜாதகத்தில் பலம் பெற்றும் பலவீனமடைந்தும் காணப்படின் ஜாதகரின் வாழ்வு சர்ப்பக்கிரகங்களின் காரகத்துவம் மற்றும் கோசரப் பலன்கள் விதியின் போக்கினை தீர்மானித்து விடுகின்றன.

சர்ப்பக்கிரகங்களான இராகுவும் கேதுவும் தோன்றிய வரலாறு வியப்புக்குரியது. மகாவிஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து திருப்பாற் கடலில் தேவர்களுக்கு அமிர்தம் பரிமாறிக் கொண்டிருந்த வேளை ஓர் அரக்கன் தேவனைப் போல் உருவெடுத்து மோகினி வழங்கிய அமிர்தத்தை உண்ட வேளையில் அமிர்தம் பருகிக் கொண்டிருந்த சூரியனும் சந்திரனும் மகாவிஷ்ணுவிடம் அரக்கனின் செயலினைக் காட்டிக் கொடுத்தனர்.

இதனால் கோபமுற்ற மோகினி உருவேறி அரக்கனின் தலையில் பலமாக அடிக்க ,அடிபட்ட அரக்கனின் உடல் இரண்டாகப்பிரிந்து தலைப்பாகம் இராகு உடற்பகுதி கேதுவாக மாறியது. அமிர்தம் உண்டபடியினால் சாகாவரம் பெற்ற இராகு கேது சிவனை நோக்கி கடுந்தவம் இயற்றி நவக்கிரகங்களின் வரிசையில் இடம்பெற்று மானிடர்களின் பலாபலன்களை தீர்மானிக்கும் வல்லவர்களாக விளங்கி நிற்கின்றனர்.

தோஷங்களில் மகா கொடிய தோஷமாக இராகு கேது ஏற்படுத்தும் காலசர்ப்ப தோஷத்தினால் தம்பதியர் திருமணவாழ்வில் பலவித இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இராகு கேது கிரகங்களுக்குள் ஏனைய கிரகங்கள் அகப்பட்டு தமது யோகபலன்கள் மானிடர்கள் அனுபவிக்க விடாது முடங்கிக் கிடக்கின்றமையே காலசர்ப்பதோஷம் எனப்படும். பிறிதொரு தோஷமும் அதாவது குருவுடன் இராகு அல்லது கேது சேரப்பெற்று குரு சண்டாள தோஷமும் ஜாதகத்தில் இடம் பெற்றுள்ளதுடன் லக்கினத்திற்கு 5ஆம் வீட்டில் கேது அல்லது இராகு வீற்றிருப்பது நாகதோஷம் எனப்படும். பாம்பென்றால் படையும் நடுங்கும் .இத்தகைய நாகதோஷங்கள் ஏற்பட காரணங்களை முனிவர்கள் சான்றோர்கள்,ஜோதிட ஞானிகள் முன் வைத்தாலும் சர்ப்பங்களைக் கொன்ற பாவமே சந்ததி சந்ததியாக தொடர்கின்றது. என்ற வாதமே மிஞ்சி நிற்கின்றது. காலசர்ப்பதோஷ ஜாதகங்களை கவனத்திற் கெடு த்து திருமணம் நிறைவேற்றி வைக்கின்றபோது ஜாதகர்களின் ஆயுட்பலம், குழந்தைப்பேறு, பிரிவினை இல்லாதநிலை,நோய் நொடிகளற்ற உடல் ஆரோக்கியம் உளப்பாதிப்புக்கள் அற்றநல்ல மனோ பாவங்கள் என்பன கவனத்திற்கு எடுத்தல் மிகமிக அவசியமாகின்றது.

குரு சண்டாள தோஷத்தினால் மணமக்களுக்கு சித்தப்பிரமையும் முன்னேற்றத்தில் தடை தாமதங்களும் ,எதிர்ப்புணர்ச்சியும், அற்ப ஆயுள் ஒற்றுமைக்குறைவும், தாரப்பிரிவினையும் ஏற்பட்டு மணவாழ்வு அர்த்தமில்லா நிலைக்கு கொண்டு சென்று விடும். ஒருவரின் ஜாதகத்தில் 5ஆம் இடம் பிரதானமாக குழந்தைப்பேறு பற்றிச் சுட்டுகின்றது. இராகு அல்லது கேது 5ஆம் வீட்டில் நிற்கின்ற போது குழந்தைப் பாக்கியம் பாதிக்கப்படுகின்றது.

குழந்தைகளே பிறவாத நிலையும் ,அரைகுறைப்பிரசவம் மூடத்தனம் அங்கங்குறைபாடு, கண்,காது பாதிப்பு ,பெற்றோர்களுக்கு பயன்படாத நிலை, கல்வி முன்னேற்றம் இன்மை விகாரமான தோற்றம்,அற்ப ஆயுள் மூளைவளர்ச்சி பாதிப்படைதல்,திறன்கள் பாதிப்புறுதல் முதலான தன்மைகள் காணப்படும். பிறக்கின்ற போது கணிக்கப்படும் ஜாதக பலாபலன்கள் கர்ப்பப்பை தொடக்கம் கல்லறைக்குச் செல்லும் வரை வளர்ச்சிப் பாதையை எடுத்துரைக்கும்.

நவக்கிரகங்களில் இராகு அல்லது கேது 1ஆம் வீட்டில் அமையப்பெறின் ஜீவிய காலம் முழுதும்நோய்,விரக்தி முன்னேற்றக்குறைவு சச்சரவு அற்ப ஆயுள் மணவாழ்வில் குழப்ப நிலை என்பவை காணப்படுவதுடன் அங்கங்களின் வளர்ச்சி குன்றுவதுடன் பகைமை உணர்வுகள் அச்சம் கொள்ளும் தன்மை என்பன மேலோங்கி இருக்கும்.

2இல் இராகு அல்லது கேது இருப்பின் வாக்குக்கலகம், பயனற்ற மணவாழ்வு, திறமையின்மை, பலதாரயோகம், செல்வம் சேர்ப்பதற்கு பிரயாசைப்படல், அடிக்கடி தேகநலப்பாதிப்பு, தாரப்பிரிவு என்பன தலைதூக்கும்.

3இல் கேது அல்லது இராகு இருப்பின் சகோதரர்களுடன் மாறுபட்ட மனப்போக்கு ,தைரியம் வீரியமின்மை,சந்ததி அற்றுப் போதல், வாதரோகங்கள் ஏற்படல் என்பன காட்டும்.4இல் இராகு அல்லது கேது இடம் பெறுவதால் மாதாவுக்கு நலக்குறைவு, சுபீட்சமில்லாத குடும்பவாழ்வு, வசந்தத்தை மறைத்து புயல் வீசவைத்தல், சுறுசுறுப்புக்குன்றல், தொழில் கேடு என்பன அமை யும்.

5 இல் இராகு அல்லது கேது நிற்பின் புத்திரபாக்கியம் பாதிப்பும் மாமன்மாருடன் சுமுக உறவுகள் குன்றிப்போதல், பரீட்சை கல்வி என்பன எதிர்பார்த்த நன்மைகளைக் கொடாது. வஞ்சகர் விரித்தவலையில் சிக்குப்படல், பைத்தியக்கார நிலைக்கும் தள்ளப் படலாம்.

6 இல்இராகு அல்லது கேது நிற்பதால் எதிரி திருடரால் தொல்லைகள்,பேய் பிசாசு பில்லி சூனியம் மருத்தீடு பற்றிய அச்சம் ,மாறாத நோய்கள் விசுவாசமில்லாத நண்பர்கள் நடத்தை கெட்ட பெண்களின் தொடர்பு, மானப் பங்கம், கௌரவக்குறைவு ஏற்றமில்லா ஜீவியம் அமையும். 7 இல் இராகு அல்லது கேது வாசஞ் செய்யின் களத்திர சுகக்கேடு, பிரமச்சாரியோகம், தாரப்பிரிவு, ஏகாந்தவாசம்,இன்பசுகங்கள் பாதிப்படையும்.

தொடரும்............

'ஜோதிர் வித்யாரத்னா வி.ஏ.சிவராசா"

# முரசின் இன்றைய பலன்



(20.08.2013 செவ்வாய்க்கிழமை)


விஜய வருஷம் ஆவணி மாதம் 04 ஆம் திகதி.
திருவோணநட்சத்திரம் பி.ப 02.32 வரை,பின் அவிட்டம்
ஆவணி ஓணம் சதுர்த்தசி திதி,சித்தயோகம்
பூரணவிரதம்
இராகுகாலம 03.05- 01.35 வரை. சுபநேரம 10.35- 12.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | 'பார்க்லைற் ஒளிரவிடாத சாரதிக்கு தண்டம், அடிப்படை வசதிகள் இன்றித் தவித்தல், அதிகாரமளிக்கப்படாத நிறுவனத்தில் முதலிட்டதால் மோசம் போதல். |
| ரிஷபம் | தடைதாமதங்கள் விலகுவதினால் நிம்மதி, விட்டுக்கொடுப்பதினால் பிரச்சினைக்கு முடிவு, தடைப்பட்ட பயணத்திற்கான அழைப்பு. |
| மிதுனம் | தொழில் நிமித்தம் பிரிவு, குழந்தைப்பேறு, நோய்க்கு சத்திரசிகிச்சை,கடன்பெற வங்கியில் விண்ணப்பம். |
| கடகம் | அறிவுக்கு வேலை கொடுத்ததால் பாராட்டு,உள்ளூர் வேலை காரணமாக பயணம் கைவிடல், புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல். |
| சிம்மம் | பயணம் வெற்றியடைதல், குழந்தைப்பேறு,புதிய விட்டுத் திட்டத்திற்கு அங்கீகாரம்,சீட்டுப்பணம் பெறுதல், சச்சரவு நீங்குதல். |
| கன்னி | வெளியூர் செல்ல முயற்சித்ததால் தடுத்து வைப்பு, தத்துப்புத்திரயோகச்சிந்தனை,வியாபாரம் களை கட்டல்,சகோதரர் உதவி. |
| துலாம் | தன்னம்பிக்கையுடன் செயற்பட்டதால் காரியம் சாதிப்பு,சந்தோஷத்தைக் கெடுத்தல்,பெட்டீசத்தால் காரிய நாசம். |
| விருச்சிகம் | சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய விழிப்புணர்ச்சி, கடன்பட்டதால் திண்டாடும் நிலை, அரசியல் பற்றிய வாக்கு வாதம்,நண்பர் உதவி. |
| தனுசு | காலதாமதத்தால் பயணம் கைவிடல், கையடக்கத் தொலைபேசி மூலம் காதல் தொடர்பு. இடைத்தங்கல் நாட்டில் பயணம் முடிவு, மூத்தசகோதரர் உதவி. |
| மகரம் | புதிய இணைப்புக்களுக்கு அனுமதி,வளர்ப்பு பிராணியின் கடியினால் ஏற்பு,மாதாவின் தேக நலம் விருத்தி,வரன் தேட அலைதல். |
| கும்பம் | கணவரின் நடத்தையினால் கவலை, கள்ள நோட்டுப்பற்றிய அவதானம், விருந்துபசாரம், திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தல். |
| மீனம் | ஆயுர்வேத மருத்துவத்தை நாடும் நோக்கம், பரீட்சை முடிவினால் மகிழ்வு, பயணம் பற்றிய சுபச் செய்தி,கௌரவப்பதவிகளுக்கு சிபார்சு. |

# பதக்கப் பட்டியலில் ரஷ்யா முதலிடம்

## தொடர் ஓட்டத்தில் உசைன் போல்ட் அணி தங்கம்





(மொஸ்கோ)

மொஸ்கோவில் நடைபெற்ற 14 ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் நேற்று முன்தினம் சிறப்புற நிறைவு பெற்றது. இதில், ரஷ்யா முதலிடம் பெற்று அசத்தியது.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில், 14ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் நடந்தன. நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 4X100 மீற்றர், தொடர் ஓட்டத்தில், பந்தய தூரத்தை 37.36 வினாடியில் கடந்த, உலகின் மின்னல் வேக மனிதன் உசைன் போல்ட் அடங்கிய ஜமேக்கா அணி, முதலிடம் பிடித்து தங்கம் வென்றது. இதன் மூலம், உலக தடகள சம்பியன்ஷிப் வரலாற்றில், 4X100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் ஜமேக்கா அணி ஹட்ரிக் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது. இது இத்தொடரில் உசைன் போல்டின் மூன்றாவது தங்கப் பதக்கம். ஏற்கனவே இவர், 100, 200 மீற்றர், ஓட்டத்தில் தங்கம் வென்றார். இதன்மூலம் உலக தடகளத்தில் இரண்டு முறை (2009, 2013) மூன்று தங்கம் வென்றார். இது, உலக தடகள அரங்கில் இவரது 8ஆவது தங்கப்பதக்கம். இதன் மூலம், உலக தடகளத்தில் அதிக தங்கம் வென்ற வீரர்கள் வரிசையில் முதலிடத்தை அமெரிக்காவின் கொர்ல் லீவிஸ், மைக்கல் ஜோன்சன் ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார். இவர்கள் மூவரும் தலா 8 தங்கம் வென்றனர்.

பெண்களுக்கான 4 X100 மீற்றர் தொடர் ஓட்டத்தில், பந்தய தூரத்தை 41.29 வினாடியில் கடந்த, ஜமேக்கா அணி முதலிடம் பிடித்து தங்கம் வென்றது. இப்போட்டியில் ஓடிய ஜமேக்காவின் ஷெல்லி-ஆன் பிரேசர்-பிரைசி ஹட்ரிக் தங்கம் வென்றார். ஏற்கனவே இவர், 100, 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றார்.

நேற்று முன்தினத்துடன் மொஸ்கோ தடகளப் போட்டி நிறைவு பெற்றது. அடுத்த போட்டி வரும் 2015இல் சீனத் தலைநகர் பீஜிங்கில் நடக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.




### பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ரஷ்யா | 07 | 04 | 06 | 17 |
| அமெரிக்கா | 06 | 13 | 06 | 25 |
| ஜமேக்கா | 06 | 02 | 01 | 09 |
| கென்யா | 05 | 04 | 03 | 12 |
| ஜேர்மனி | 04 | 02 | 01 | 07 |
| எத்தியோபியா | 03 | 03 | 04 | 10 |
| பிரிட்டன் | 03 | 00 | 02 | 05 |
| செக்குடியரசு | 02 | 00 | 01 | 03 |
| உக்ரைன் | 02 | 00 | 01 | 03 |
| பிரான்ஸ் | 01 | 03 | 01 | 05 |


# உனக்கானதா இந்த ஆண்டு



அமெரிக்காவில் நடைபெற்ற சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் நடால் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.

அமெரிக்காவில் சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டிகள் நடைபெறறன. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நாடால் அமெரிக்காவின் ஜோன் இஸ்னெருடன் மோதினார். இதில் நாடால் 7-6 (10-8),7-6 (7-3) என்ற செட்கணக்கில் ஜோன் இஸ்னெரை வீழ்த்தி சின்சினாட்டி மாஸ்டர்ஸ் கோப்பையை கைப்பற்றினார். இந்த வெற்றியின் மூலம் ரென்னிஸ் தரப்படுத்தலில் ரபேல் நாடால் இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார். இதேவேளை, இந்த ஆண்டில் மட்டும் ரபேல் நாடால் ஒன்பது கிண்ணங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிம்பாப்வே இளம் வீரர் திடீர் ஓய்வு



(ஹராரே)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக, சிம்பாப்வே அணி நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் கைல் ஜொர்விஸ் (வயது-24) அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, சிம்பாப்வே அணிக்காக விளையாடியது மகிழ்ச்சியான அனுபவம். ஆனால், கடந்த சில நாட்களாக ஊதிய உயர்வு கோரி கிரிக்கெட் சபையுடன் போராட நேரிட்டது துரதிர்ஷ்டவசமானது.

சர்வதேச போட்டிகளில் இருந்து உடனடியாக ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். இதில் எந்த மாற்றமும் இல்லை. பி[illegible] பலமான இங்கிலாந்து கவுன்டி கிளப் அணிக்காக மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளேன். ஐ.பி.எல். போன்ற ருவென்ரி-20 போட்டித் தொடர்களில் விளையாடவும் அழைப்பு வந்துள்ளது. இது தொடர்பாக எனது முகவர்கள் தொடர்ந்து பேசி வருகின்றனர். இரசிகர்களும் சிம்பாப்வே மக்களும் எனது உணர்வுகளைப் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன். சக வீரர்கள், பயிற்சியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

கைல் ஜொர்விஸ் 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 30 விக்கெட்டுக்களையும் மற்றும் 24 ஒருநாள் போட்டிகளில் 27 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

# சிரேஷ்ட வீரர்கள் முயன்றால் மீள முடியும்



(புதுடில்லி)

சேவாக், கம்பீர், யுவராஜ்சிங், சகீர்கான் ஆகியோர் கடும் உழைப்பு மற்றும் உடல் தகுதி ஆகியவற்றை சரியான முறையில் வெளிப்படுத்தினால் மீண்டும் அணியில் இடம்பிடிக்க முடியும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி தெரிவித்துள்ளார்.

எந்த ஒரு வீரரையும் அணியில் இருந்து முழுமையாக வெளியேற்ற முடியாது. சேவாக், கம்பீர், யுவராஜ்சிங், சகீர்கான் போன்ற வீரர்கள் இல்லாத அணி 2011ஆம் ஆண்டில் இல்லை. ஆனால் அவர்கள் தற்போது அணியில் இல்லை. எனவே நாளைக்கு என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. அவர்கள் அனைவருமே சிறந்த வீரர்கள் தான். உலக கோப்பையை வென்று கொடுத்தனர். அவர்கள் இந்திய அணியில் மீண்டும் இணையும் ஆர்வத்தில் உள்ளனர். இதற்காக அவர்கள் கடுமையாகப் போராட வேண்டும். அவர்களால் அணியில் மீண்டும் இடம் பெறமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது.கடும் உழைப்பு, உடல் தகுதி மூலமே அவர்கள் அணியில் இடம்பெற முடியும்.

சேவாக் மிகச்சிறந்த தொடக்க வீரர். சகீர்கான் 300 விக்கெட் வரை நெருங்கியுள்ளனர். யுவராஜ்சிங் உலக கோப்பையில் முத்திரை பதித்தவர். இவர்கள் நீண்ட காலம் அணியில் இல்லாமல் இருக்க முடியாது. கம்பீர் இங்கிலாந்து கவுண்டியில் விளையாட எடுத்த முடிவு சரியானதே. எந்த ஒரு வீரரும் பாடம் கற்பதன் மூலமே அணிக்கு திரும்ப முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாளை இறுதி டெஸ்ட்

(லண்டன்)

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நாளை இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஏற்கனவே 3-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. இந்நிலையில் ஐந்தாவது போட்டியிலும் வெற்றி பெறும் முனைப்பில் இங்கிலாந்து களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, தொடரை இழந்து பெரும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் அவுஸ்ரேலிய அணி, இறுதிப் போட்டியில் ஆறுதல் வெற்றிக்காகப் போராடும் என கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடரை இழந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தாலும் அதிர்ஷடம் எமது பக்கம் இல்லாமல் இருந்ததும் எங்கள் தோல்விக்கு முக்கிய காரணம். ஆனால், இறுதி டெஸ்ட் போட்டியை வெல்லும் முனைப்பில் எமது வீரர்கள் செயற்படுவார்கள் என்று நம்புகின்றேன் என அவுஸ்ரேலிய பயிற்றுவிப்பாளர் லீமன் தெரிவித்தார்.

# வடமாகாண கனிஷ்ட குறுந்தூர மெய்வல்லுநர் மேலதிக பயிற்சிக்கு 12 பேர் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலிருந்து 12 மெய்வல்லுநர் வீரர்கள் மேலதிக பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் 2018ஆம் நடைபெறவுள்ள பொது நலவாய விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ளும் தேசிய மட்ட மெய்வல்லுநர் அணியினைத் தெரிவு செய்வதற்காக மாகாண ரீதியில் குறுந்தூர ஓட்ட வீர, வீராங்கனைகளைத் தெரிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது நடைபெற்று வருகின்றது

இது போன்ற நிகழ்வொன்று வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலைக்கு இடையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற ஓட்ட வீராங்கனைகளுக்கான தெரிவு நிகழ்ச்சிகள் கடந்த 15ஆம் மற்றும் 16 ஆகிய திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்தத் தெரிவினை விளையாட்டு அமைச்சின் வளவாளராகிய சுசந்திகா ஜெயசிங்க மேற்கொண்டார். மேற்படி தெரிவு நிகழ்ச்சியில் வட மாகாணத்தைச் சேர்ந்த 25 பேர் கலந்துகொண்டனர். இவர்களில் 12 பேர் தெரிவு செய்யப்பட்டு செப்ரெம்பர் மாதம் 03ஆம் மற்றும் 04ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் மேலதிக பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர்களுடைய பெயர் விபரங்கள் வளவாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்வி திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் தெரிவித்துள்ளார். இதில் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 10 பேரும், மன்னார் மாவட்டத்தினைச்சேர்ந்த 2 பேரும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் 13 வயதுப் பிரிவில் மூன்று பேரும், 15 வயதுப் பிரிவில் 9 பேரும் தெரி வாகியுள்ளனர்.

அதன் விபரம் வருமாறு: 13 வயதுப் பிரிவில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியைச் சேர்ந்த ஜே. பிரவீனன், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். டிலுக்ஸன், கற்கண்டகுளம் ஜி.ரி.எம்.எஸ். சேர்ந்த ஏ.அனுசலாஆகியோரும், 15 வயதுப் பிரிவில், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த என். விதுஸனா, அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த கே. நெப்தரி ஜொய்ஸன், சென். ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜி.எல். கோல்ட்சயன், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கே.டிலுக்ஸன், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த எம். கஜவரன், யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். செந்தூரியன், மன்னார் கௌரியம்பாள் ஜி.ரி.எம்.எஸ். சேர்ந்த எஸ். பிரியதர்சினி, வேம்படி உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த யு. மானசிதா, சென். பற்றிக்ஸ் கல்லூரி யைச் சேர்ந்த சி. மொடேன் எல்விஸ்.

## கிரிக்கெட் தொடர்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டு கழகமும் சைவ பள்ளிக்கூட நண்பர்களும் இணைந்து அமரர் கணேஷ் தர்மகுலசிங்கம் ஞாபகார்த்தமாக மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரை நடாத்தவுள்ளது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் போட்டி மற்றும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட 12 ஓவர் போட்டி என இரு வகையில் இப்போட்டி நடாத்தப்படவுள்ளன. அத் தொடரில் பங்கு கொள்ள விரும்பும் அணியை விரைவாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் 0775002184, 0771939015 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்.பி.)

## பிரெஸ்னன் கவலை

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஆஷஸ் தொடரின் ஐந்தாவது போட்டியில் காயம் காரணமாக விளையாட முடியாமல் போனது கவலையளிக்கின்றது என இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் பிரெஸ்னன் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியது மகிழ்ச்சி. இருப்பினும் ஆஷஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பங்கு கொள்ள முடியாமல் போனது வருத்தமளிக்கின்றது. ஐந்தாவது போட்டியில் இங்கிலாந்து வீரர்கள் வெற்றிக்காக உழைப்பார்கள் என்று நம்புகின்றேன் என்றார். ஆஷஸ் தொடரின் ஐந்தாவது டெஸ்ட் போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## காலிறுதியில் கைதடி வளர்மதி, மீசாலை சீமா

(மட்டுவில்)

மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரதேச மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு கைதடி வளர்மதி, மீசாலை மீசா அணிகள் தகுதி பெற்றுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தினால் மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடர் நடாத்தப்பட்டு வருகின்றது.

மின்னொளியில் இடம்பெற்று வரும் இப்போட்டி மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இரண்டு போட்டிகள் நடைபெற்றன. முதலாவது போட்டியில் மட்டுவில் விநாயகர் அணியும், கைதடி வளர்மதி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கைதடி வளர்மதி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் நனாதீபம் அணியும் மீசாலை சீமா பி அணியும் மோதின. இதில் மீசாலை சீமா அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் இரு காலிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து மீசாலை மீசா அணியும், அம்பிகை அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (118)

## யூட், நிதர்சன் தாக்குதல் ஆட்டம் இறுதியில் நாவாந்துறை சென்.மேரிஸ்

(நெல்லியடி)

யூட், நிதர்சன் ஆகியோரின் தாக்குதல் ஆட்டத்தின் மூலம் நாவாந்துறை சென். மேரிஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டை முன்னிட்டு வடக்கு மாகாண கால்பந்து அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்து தொடரை நடாத்தி வருகின்றது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இக்கால்பந்தாட்டப் போட்டி வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த 17ஆம் திகதி மாலை நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் மற்றும் நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் மோதின.

ஆரம்பம் முதலே நாவாந்துறை சென். மேரிஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டம் ஆரம்பமாக 3ஆவது நிடமிடத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் வீரர் ஜெனட் முதல் கோலை அடித்து அசத்தினார். தொடர்ந்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதில் 14ஆவது நிமிடத்தில் யூட்டும், 16ஆவது நிமிடத்தில் நிதர்சன் அடுத்தடுத்து கோல்களைப் பெற்றுக்கொடுத்தனர். நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியால் பதில் கோல் அடிக்க முடியவில்லை. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை நாவாந்துறை சென். மேரிஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி 7ஆவது நிமிடத்தில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி முதல் கோலைப் போட்டது. இதன் பின்னர் வேகமுற்ற நாவாந்துறை சென். மேரிஸ் அணி, 9 மற்றும் 13ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு வெற்றியை உறுதி செய்தது. இந்தக் கோல்களை முறையே நிதர்சன், யூட் ஆகியோர் பெற்றுக்கொடுத்தனர். இறுதி நேரத்தில் தண்ட உதை வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி அதனைக் கோலாக்கியது. இறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இப்போட்டியின் சிறந்த வீரராக நாவாந்துறை சென். மேரிஸ் அணி வீரர் நிதர்சன் தெரிவானார். எதிரணியின் சிறந்த வீரராக யேசுதாசன் தெரிவானார். (17)

## எடுத்துக்காட்டான செயல்

அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீராங்கனை சாரா எலியட் தாய்ப்பாலின் அவசியத்தை உணர்த்தியுள்ளார்.

உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு அமைப்புகள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதன் அவசியத்தை உணர்த்தி வருகிறது. இந்நிலையில் அவுஸ்ரேலிய வீராங்கனை சாரா எலியட் தனது குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்து கொண்டே சதம் விளாசியுள்ளார். அவுஸ்ரேலியா-இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே ஆஷஸ் தொடர் நடந்து வருகிறது.

இவருக்கு 9 மாத மகன் உள்ளார், எனவே ஆட்டத்தின் நடுவே உணவு மற்றும் தேநீர் இடைவேளையின் போது தனது மகனுக்கு தாய்ப்பால் கொடுத்து விட்டு களமிறங்கினார். எந்த சோர்வும் இல்லாமல் அவர் சிறப்பாக ஆடி சதம் விளாசினார். தனது குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்து கொண்டே சதம் விளாசிய அவரை அனைவரும் பாராட்டினர். இது தாய்ப்பால் கொடுக்கும் அனைத்து அம்மாக்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## 2ஆவது சுற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15, 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் வடக்கு மாகாண அணிகளுக்கிடையிலான போட்டிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் புத்துக்குடியிருப்பு மத்திய கல்லூரி மற்றும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று நாளை மறுதினம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.பி.)

# இது உசுப்பேற்றும் இடிமுழக்கங்களுக்கான மாதம்!

வேங்கையின் மைந்தன் கட்டுரையிலிருந்து.

நீதியரசர் விக்னேஸ்வரனை கூட்டமைப்பின் உண்மை இரட்டைத் தலைமைகளான திருவாளர்கள் சம்பந்தன், பேசி, பின்னர் 13+ பேசி, இப்போது 13 கிடைத்தாலே போதுமானது

என்று படிப்படியாகக் குறைத்து வரும் அரசியலை செய்துவரும் கூட்டமைப்பு 13ஆவது திருத்தத்தின் மூலம் சமஷ்டியை நோக்கி நகரலாம் என்ற புலுடாவை மக்கள் மத்தியில் இந்தத் தேர்தலின் மூலம் முன் வைக்கும். இந்தப் புலுடா அரசியலை நியாயப்படுத்துவதற்கு நீதியரசர் விக்னேஸ்வரன் தமக்கு ஒரு கேடயமாகப் பயன்படுவார் என்று எண்ணி அவரைக் களம் இறக்கி உள்ளார்கள்.

விக்னேஸ்வரன் அண்மையில் அளித்த சில நேர்காணல்களை வைத்துப் பார்க்கும் போது அவரைப் பொறுத்த வரையில் "ஈழத் தமிழ் தேசியம்" என்பதற்குள் புலம்பெயர் மக்கள் இல்லை. அவர்கள் வெளியார் தான் பின்பற்றுகிறார் கள் என்பதை இந்தப் பத்திரிகைகள் ஒருபோ தும் விமர்சனத்துக்கு உள்ளாக்காமையே. சம்பந்தரும் சுமந்திரரும் தம்மை "சிறிலங்கன் தமிழராக-வே" எப்பொழுதும் கருதி வந்துள்ளனர்.

மார்ச் மாதம் 2012 ஆம் ஆண்டு சென்னையில் உரையாற்றிய சுமந்திரன் தமிழ் நாட்டுத் தமிழரிடம் நாம் எமது பிரச்சினையை பார்த்துக் தலைமைப் பீடம் மட்டுமல்ல - இதற்கு கூட்டமைப்பில் உள்ள சகலரும் - சுரேஷ், செல்வம், சிறீதரன், அரியநேந்திரன் உட்பட எல்லோரும் கூட்டுப் பொறுப்பு எடுக்க வேண்டும். பதில் சொல்ல கடமைப்பட்டவர்களும் ஆவார்கள்.

சங்கரியாரும் சித்தார்த்தனும் அடுத்து வரும் வாரங்களில் வாக்கு வேட்டைக்காக விடுதலைப் புலிகளின் தியாகத்தை மெச்சிப் பேசக் கூடும்.




சுமந்திரனும் பிரேரித்ததற்கான காரணங்கள் இரண்டு:

1. 13ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை என்றவாறாக தமிழ் அரசியலைக் கொண்டு போவதற்கு இலகுவில் விமர்சிக்க முடியாத, விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட ஆளுமை ஒன்று இவர்களுக்குத் தேவைப்பட்டது. அதன் காரணமாகவே இவர்கள் விக்னேஸ்வரனைத் தெரிவு செய்தார்கள். 2010 நாடாளுமன்றத் தேர்தலில் சமஷ்டி தீர்வைப் பற்றி யலை நியாயப்படுத்து வதற்கு ஒரு புதிய முகம் - ஆளுமை-மயான மனிதர் இவர்களுக்குத் தேவைப்பட்டது. அவரே நீதியரசர் விக்னேஸ்வரன்.

2. தமிழ் மக்கள் மத்தியில் சரிந்து வரும் தமது ஆளுமைகளை தூக்கி நிறுத்துவதற்கான வாய்ப்பாகச் சம்பந்தனும் சுமந்திரனும் விக்னேஸ்வரனின் அறிமுகத்தைப் பார்க்கின்றனர். சம்பந்தன் - சுமந்திரன் கூட்டணி தொடர்பில் மக்கள் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள். அந்த கேள்வி கேட்டலில் இருந்து தப்பித்துக் ('outsiders'). அதே போன்று வெளியாராக அவர் கருதும் இன்னொரு தரப்பு தமிழ் நாட்டு மக்களும், செயற்பாட்டாளர்களும், அரசியல்வாதிகளும். உண்மையில் "ஈழத் தமிழ் தேசியம்" என்ற அரசியல் பரப்பை அவர் ஏற்றுக் கொண்டவரல்ல. அவரது அரசியல் பரப்பு "சிறிலங்கா" எனும் வெளிக்குள் உள்ளடக்கம். அதற்குட்பட்டவர்கள் "எம்மவர்" அதற்கு வெளியில் இருப்பவர்கள் "வெளியார்".

ஆனால் இதில் என்ன வேடிக்கை என்றால் தாம் சார்ந்து இயங்குபவர்களது அரசியல் நலன் கருதி உதயனும் சுடரொளியும் விக்னேஸ்வரனை விமர்சித்தமையே. வேடிக்கை எதில் என்று கேட்டால் சம்பந்தரும் சுமந்திரரும் இதே அரசியலைத் கொள்கின்றோம் என்று சொல்லி விட்டு வந்தார். "சர்வஜன வாக்கெடுப்பை கோருவதென்றால் அதனை நாங்கள் தான் கோரவேண்டும் வேறு யாரும் கோர முடியாது" என்று சூடாகப் பேசி விட்டு வந்தார்.

சம்பந்தர் சிங்கக் கொடி தூக்கியபோது, நாடாளுமன்றத்தில் "விடுதலைப் புலிகள் அழிந்து போவதற்கு வேறொருவரும் காரணம் இல்லை, அவர்களே காரணம்" என்று கூறிய போதெல்லாம் எங்கே போயின இந்தத் தமிழ் பத்திரிகைகள்? "முன்னாள் போராளிகளுக்கு அருமை யான முறையில் புனர் வாழ்வு அளிக்கப்படுகின்றது" என்று சம்பந்தர் கூறியபோது எங்கே போயின தமிழ் பத்திரிகைகள்? "13 அவது திருத்தத்திற்கு மேலான ஒரு புள்ளியைத் தீர்வுக்கான ஆரம்பப் புள்ளி யாகக் கருதலாம்" என்று சம்பந்தர் தமிழரசுக் கட்சி மாநாட்டில் "பேருரை" ஆற்றிய போது எங்கே போயின இந்தப் பத்திரிகைகள்?

பிரச்சினைக்குரியவர் விக்னேஸ்வரன் என்ற தனி நபர் அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நிகழ்ச்சித் திட்டமே. கூட்டமைப்பின் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு - அதன் சிறீதரன் எம்.பி, கட்சி அந்தக் கருத்தில் இல்லையென்று தெரிந்தாலும், கூட்டமைப்பு மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பிரச்சாரம் செய்வார். தமது தலைவர்கள் அதைப் பற்றி பேச விருப்பற்றவர்கள் என்றாலும் தேசியம், சுயநிர்ணயம், தாயகம் என்று வேட்பாளர்கள் மேடைகளில் முழங்கித் தள்ளுவார்கள். சம்பந்தன் ஐயா கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது பேசிய மாதிரி "வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடவுள் தந்த வரம்" என்று பேசக் கூடும். ஏற்கனவே தினக்குரல், நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக பிரேரிக்கப்பட்ட அன்று "வடக்கில் புரட்சி" என்று தலைப்புச் செய்தி போட்டு மக்களை உசுப்பேற்ற வேண்டாம் என்ற தமது அறிவுரையை தாமே மீறி விட்டனர். வீரகேசரி "வடக்கு மாகாண சபைத் தேர்தல் ஐந்தாம் கட்ட ஈழப் போர்" என்று கொக்கரித்த கொழும்பு வாழ் சட்டத்தரணி ஒருவரின் கட்டுரையை பிரசுரித்து தனது பக்கத்திற்கு உசுப்பேற்றலை செய்து வருகின்றது. இது போன்ற இடிமுழக்கங்களை தமிழ் மக்கள் கேட்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை அடுத்த சில வாரங்கள் ஆளாகப் போகின்றனர்.

# உண்மை மனிதனாக...

சின்ன வயதில் ரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலியை மனப்பாடமே செய்திருக்கிறேன். வி.ஆர்.எம். செட்டியாரின் மொழிபெயர்ப்பைக் கையிலேயே தூக்கிக் கொண்டு அலைவேன். "படிக்கும்போதெல்லாம் நெருப்புல குமிஞ்சான் அள்ளிப் போட்டது மாதிரி இருக்கு" என்று நண்பர்களிடம் சொல்வேன். குமிஞ்சான் என்றால் சாம்பிராணி. தாகூரைப் படிக்கும் போதெல்லாம்



சாம்பிராணி போட்டது போன்ற இனம் தெரியாத உணர்வு என் மனதைச் சூழும்.

ஆனால் நான் வளர வளர... தாகூர் குள்ளமாகிவிட்டார். ஒன்பது வயதில் என்னைப் பிடித்துவிட்ட பாரதியோ இன்றும் ஆதர்ச புரு'னாகவே தொடர்கிறான். அவனுடைய ஒவ்வொரு கவிதையையும் படிக்கப் படிக்க அவன் மீதிருக்கும் மதிப்பு உயர்ந்து கொண்டே போகிறது. எந்த எல்லைக்கும் சென்று நான் பாரதிக்கு வணக்கம் செய்வேன். "தமிழ்நாட்டில் பாரதியிலிருந்துதான் மனிதன் தொடங்குகிறான்" என்றுகூடச் சொல்லியிருக்கிறேன்.

உண்மையான ஒரு மனிதனாக வாழ்ந்தவன் பாரதி. பிராமணர் அல்லாத ஐந்தாறு பேருக்குப் பூணூல் போட்டிருக்கிறான். அதில் ஒருவர் நாகலிங்கம். மாரியம்மன் கோயிலில் பூசை செய்யும் அவரை முதல் நாள் "பண்டாரம்" என்றும் அடுத்த நாள் பூசாரி என்றும் மூன்றாம் நாள் "குருக்களே" என்றும் அழைத்துப் பெருமைப்படுத்திய துணிச்சல்காரன் பாரதி.

ஒருமுறை என் நண்பர் ஒருவர் கடலூர் சப்-ஜெயிலில் இருக்கும் பழைய ஆவணம் ஒன்றைப் பார்த்திருக்கிறார். அதில் பாரதியின் பெயர், சுப்பிரமணிய ஐயர். கைதியின் தகப்பனார் பெயர் சின்னசாமி ஐயர். கைதியின் தொழில் "லோ.'.பர்" என்று இருந்திருக்கிறது.

"தொழில் என்ன?" என்று கேட்டதற்கு பாரதி என்ன பதில் சொன்னானோ.... சிப்பந்திக்கு என்ன புரிந்ததோ.. "லோ.'.பர்" என்று பதிவு செய்துவிட்டான்! எப்பேர்ப்பட்ட கவிஞனுக்கு எப்படிப்பட்ட ஒரு பட்டம்!

நான் பாரதியைப் போல் ஆக விரும்புகிறேன். அப்படி ஆக முடியாமல் கூடப் போகலாம். ஆனால் அப்படி ஆக விரும்புவதில்தான் வாழ்க்கை இருக்கிறது என்று நினைக்கிறேன்.

('தாகூர், பாரதி' என்ற கட்டுரையில் வலம்புரி ஜான்)






# பாக். டாக்டரை காதலித்தார் டயானா?

பிரிட்டனின் மறைந்த இளவரசி டயானா மீது, உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே நல்ல மரியாதை உண்டு. அவரின் மனிதாபிமான குணம் தான், இதற்கு காரணம். ஆனால், டயானாவின் சொந்த வாழ்க்கை, திருப்பங்களும், சோகங்களும் நிறைந்தவை. அவர் இறந்து, 16 ஆண்டுகள் ஆன நிலையில், அவரைப் பற்றிய பரபரப்பான தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் இம்ரான்கான், பிரிட்டனை சேர்ந்த ஜெமீமா என்பவரை காதலித்து திருமணம் செய்தார். பின், இருவரும் பிரிந்து விட்டனர். இந்த ஜெமீமா, பிரிட்டன் பத்திரிகை ஒன்றுக்கு சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில், "இளவரசி டயானா, பாகிஸ்தானைச் சேர்ந்த ஹஸ்னத்கான் என்ற டாக்டரை காதலித்தார். அவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதற்காக என் உதவியை நாடினார். இரண்டு முறை பாகிஸ்தானுக்கு வந்தார். ஆனால், அவரின் அந்த காதல், கைகூடாமல் தோல்வியில் முடிந்து விட்டது..." என, தெரிவித்துள்ளார்.

ஜெமீமா போட்டுள்ள இந்த குண்டு, பாகிஸ் தானிலும், பிரிட்டனிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நுகர்வோர் யார்?




உணவு, உடை, உறைவிடம் இம்மூன்றும் உலகில் பிறந்த அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகும். இம்மூன்றும் பெற்றவர்கள் உலகில் நலமுடன் வாழ்வர். இவர்கள் எல்லோருமே தங்களுக்காகப் பலவித பொருட்களைப் பிறரிடமிருந்து வாங்குகிறார்கள்.

இப்படி வாங்கி அனுபவிப்போர் "நுகர்வோர்" (Cnsumer) என அழைக்கப்படுகிறார்கள்.

நுகர்வோர் வாங்கும் பொருட்கள்

* தரமானதாகவும்
* சரியான எடையுடனும்
* நியாயமான விலையிலும்

கிடைக்க வேண்டும். பொருட்கள், இந்த மூன்றின் செயற்பாட்டு வழியாக நுகர்வோரைச் சென்றடைகிறதா என்பதைக் கவனிக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த "ரோல்ப் நடார்" என்பவர் நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார். அவர் தோற்றுவித்த இந்த அமைப்புதான் உலகின் பல பகுதிகளுக்கும் முன்னோடியாக அமைந்தது எனலாம்.

பொருட்களை வாங்கும்போது நுகர்வோருக்கு ஏற்படும் குறைகளைக் களையவும் அவர்கள் ஏமாற்றம் அடைவதைத் தடுக்கவும் அதனால் ஏற்படும் இழப்பினைச் சரி செய்யவும் 1926 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ஒன்று இயற்றப்பட்டது.

குறைபாடுள்ள பொருட்களைத் தடை செய்யவும் இச்சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. மேலும் பொருட்களில் கலப்படம் செய்து விற்பனை செய்பவர்களையும் அதே போல உற்பத்தி நிலையிலேயே தரக்குறைவாகத் தயாரிக்கும் உற்பத்தியாளர்களையும் தவறு செய்யாமல் தடுப்பதற்கு இந்தச் சட்டத்தில் வழி வகைகள் உள்ளன.

இதற்கு முன்னரே, 1958ஆம் ஆண்டு நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு எடை அளவுச் சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் எடைக் கற்கள் அரசினால் முத்திரை இடப்படுகின்றன. ஆண்டுக்கு ஒருமுறை அரசின் எடை மற்றும் அளவுத் துறையை அணுகி எடைக் கற்களைக் காண்பித்து, அரசின் முத்திரையைப் பெற வேண்டும். நுகர்வோருக்கு விற்கப்படும் பொருட்கள் எடை குறைவாக இருந்தாலும் எடைக் கற்கள் சரியான முத்திரையில்லாமல் இருந்தாலும் விற்போருக்கு இந்தச் சட்டத்தின் மூலம் தண்டனை வாங்கித் தரமுடியும்.

பொட்டலம் (பக்கெற்) போன்ற அமைப்பில் உள்ள பொருட்களாக இருந்தால் உறையின்மேல்

* பொருளின் பெயர்
* பொருளின் அளவு
* விலை விவரம்
* தயாரிப்பு திகதி
* உற்பத்தியாளர் பெயர் மற்றும் முகவரி

ஆகிய விவரங்கள் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதே போன்று மருத்துவப் பொருட்களில் கூடுதலாக எந்தக் காலம் வரை அந்த மருந்தைப் பயன்படுத்தலாம் என்ற விவரமும் இருக்க வேண்டும்.

நுகர்வோர் நலன் கருதி தொடுக்கப்படும் வழக்கை நுகர்வோர் நீதிமன்றங்கள் குறுகிய காலத்தில் அதாவது மூன்று மாதங்களுக்குள் முடிக்க வேண்டும் என்ற ஒரு நியதியும் உண்டு. இந்த நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்பானது -

* குறைகளைத் தீர்த்தல்
* பொருட்களை மாற்றிக் கொடுத்தல்
* அல்லது தொகையினை திருப்பித் தருதல்
* நஷ்ட ஈடு வழங்குதல்
* சிறைத்தண்டனை

என்று ஏதாவது ஒன்று இவற்றில் அடங்கும்.

ஒரு பொருளுக்கு உத்திரவாதம் இருக்கும்பட்சத்தில், பொருளில் குறைபாடுகள் இருந்தால் குறிப்பிட்ட காலத்துக்குள் அதை மாற்றித் தர வேண்டும். தவறினால் நுகர்வோர், நல நீதிமன்றங்களின் உதவியை நாடலாம்.

இன்றைய காலகட்டம் ஓர் விளம்பர யுகம். ஒரு பொருள் வாங்கினால் மற்றொரு பொருள் இலவசம் என்று விளம்பரம் செய்யப்படுகின்றது. இவ்வாறு விளம்பரம் செய்யப்படும் பொருட்கள் தரமானவைகள்தானா என்று ஒருமுறைக்கு இரண்டு முறை யோசித்து வாங்குங்கள்.

- நா. கிருஷ்ணவேல் -

---

# 'இந்தியன் இங்க்'




ஓவியர்கள் பெரிதும் பயன்படுத்தும் "இந்தியன் இங்க்"இற்கும், இந்தியாவுக்கும் சம்பந்தம் இல்லை. ஆரம்பத்தில் சீனா, ஜப்பான்காரர்கள் தயாரித்த மையிற்குத்தான், "இந்தியன் இங்க்" என்று பெயர் வைத்தனர்.

அது மட்டுமல்ல... டயர், பென்சில் அழிக்கும் றப்பர் போன்றவற்றிற்கெல்லாம் கூட, இந்தியா றப்பர் என்று தான் பெயர்... அந்தக்காலத்தில் அங்கெல்லாம் இந்தியப் பொருட்களுக்கு மவுசு இருந்ததால் அப்படி பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

இவை மட்டுமல்ல... என்சைக்ளோபீடியா ஒப் பிரிட்டானிகா போன்ற உயர்ந்த புத்தகங்களுக்குப் போட்டிருக்கிற பேப்பர் மெல்லியதாக, ஆனால், மிகவும் வலுவானதாக இருக்கும் - அதற்கு ஒக்ஸ்போர்ட் இந்தியா பேப்பர் என்று தான் பெயர். அச்சு இயந்திரப் பகுதியில் மை அடைசல் இல்லாமல் சுத்தமாக அச்சை ஒற்றி எடுப்பதற்காக ஒருவிதமான பேப்பர் உபயோகிப்பர்; அதற்கும் இந்திய பேப்பர் என்றே பெயர்...

---



# தயிர் தகவல்கள்

• தயிரின் மேல் நிற்கும் ஆடையை மட்டும் எடுத்து சிறிது தேன், வெல்லம் சேர்த்துச் சாப்பிட உடல் புஷ்டியைத் தரும்.

• உறை ஊற்றிய பின் சில சமயம் நன்கு உறையாமல் இருக்கும். (அதாவது பால் நிலைக்கும் தயிர் நிலைக்கும் இடையே இருக்கும்.) அது வயிற்றில் வேகமாகத் புளிக்கத் தொடங்கி பசியைக் குறைத்து, நெஞ்செரிச்சல், புளித்த ஏப்பம், வாய்ப்புண் ஆகிவற்றிற்கு வழி வகுக்கும்.

• மண் சட்டியிலிருந்து உறை குத்திய தயிர்தான் நமது தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது. அது கெட்டியாகவும் இருக்கும்.

• ஒருபோதும் தயிரை சுட வைத்துச் சாப்பிடக்கூடாது. சிலர் சூடான சோற்றில் தயிர் கலந்து, கடுகு தாளித்து உப்புச் சேர்த்துச் சாப்பிடுவார்கள். இது உடலுக்கு ஏற்றதல்ல.

• உடலைப் புஷ்டியாக்க விரும்புபவர்கள் வேக வைத்த பச்சைப்பயிறு, நெல்லிக்காய் துவையலுடன் தயிர் சாப்பிடலாம்.

• தோய்ந்து நிற்கும் தயிரின் அடிப்பகுதியில் தெளிவான தண்ணீர் காணப்படும். இது இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு மூன்றும் கலந்த சிறந்த பானம். அந்தத் தண்ணீரை வெறும் வயிற்றில் காலை, மாலை கால் கிளாஸ் குடித்தால் தொண்டை எரிச்சல், குமட்டல், உடற்சூடு, களைப்பு, தலைச்சளி ஆகியவற்றை விரட்டும்.

• தயிரை துணியில் வடிகட்டி அதிலுள்ள நீர் முழுவதும் வடிந்த பிறகு அதனுடன் சீனி, ஏலக்காய், கிராம்பு, குங்குமப் பூ, பச்சைக் கற்பூரம் சேர்த்து குளிர வைத்து தயாரிப்பதுதான் ஸ்ரீகண்ட். இது உடல் உஷ்ணத்தைக் குறைக்கும்.

• பசியில்லாதவர்கள் புளிப்பு தலை காட்டத் தொடங்கிய தயிரைச் சாப்பிட்டால் பசியைத் தூண்டும்.

• நன்றாக புளித்த தயிர் இரத்தக் கொதிப்பு, பித்தவாயு, வயிற்றுக் கோளாறுகள் உள்ளவர்களுக்கு ஏற்றதல்ல.

• இரவில் குளிர்ச்சியான தன்மையில் தயிரை சாப்பிட்டால் மூச்சிரைப்பு, சமிபாட்டுக் குறைவு ஏற்படும். அதனால்தான் தயிர்ரை இரவில் உண்ணக்கூடாது என்கிறார்கள்.

• இரவில் தொடர்ந்து தயிர் சாப்பிட்டால் இரத்த சோகை, காமாலை, தோல் நோய், இரத்தக் கொதிப்பு போன்றவை உண்டாகும்.

• இரவில் தயிர் சாப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் வந்தால் அதனுடன் சிறிது தேன் கலந்து சாப்பிடலாம். அல்லது சீரகம், இந்துப்பு, பெருங்காயம் சேர்த்து சாப்பிடலாம்.

---

# வித்தியாசமான ஆணும் பெண்ணும்!




படத்திலுள்ள இளம் ஜோடியை கூர்ந்து பாருங்கள். எதுவும் புரியாவிட்டால் தொடர்ந்து படியுங்கள். முதலாமவர் பெயர் அண்ட்ரூ. இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன், எமரோல்ட் என்ற பெயரில், பெண்ணாக பவனி வந்தவர். இரண்டாமவர், ஹில்லோ. இவர், லூகாஸ் என்ற பெயரில் ஆணாக உலவியவர்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், எமரோல்டுக்கு, பெண்ணின் உணர்வுக்கு மாறாக, ஆணுக்குரிய சிந்தனைகள் பெருக, பெற்றோர் உதவியுடன் மாற்று அறுவை சிகிச்சை செய்து, ஆணாக மாறிவிட்டார்.

லூகாஸ் நிலையோ இதற்கு எதிரானது. தன்னை ஒத்த ஆண் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடினாலும், தனிமையை உணர்ந்தார். பெண் சார்ந்த உணர்ச்சிகள், ஆசைகள் அதிகரிக்க, பெற்றோர் உதவியுடன், தன்னை மாற்று அறுவை சிசிச்சை செய்து, பெண்ணாக மாறினார்.

இப்படி, மாற்று அறுவை சிகிச்சை மூலம் புது வாழ்வு கண்ட, இவர்களின் சந்திப்பு, எதிர்பாராத விதமாக நடக்க, இருவரும், ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டனர். இன்று, பெற்றோர் ஆசியுடன் இருவரும் இளம் ஜோடியாக பவனி வருகின்றனர்.

இதில் இன்னொரு சிறப்பு என்னவென்றால், அண்ட்ரூ 17 வயதாகும் மாணவன், ஹில்லோ 19 வயது கல்லூரி மாணவி. இவர்கள் காதலுக்கு வயதும் ஒரு பொருட்டாக இருக்கவில்லை...



கிளிநொச்சி புன்னை நிராவி கிராமசேவகப்பிரிவின் சிரேஸ்ட பிரசைகளின் ஒன்றுகூடல் இடம்பெற்று குழவின் சொந்த நிதியில் இருந்து மூவருக்கு வட்டியில்லாக் கடனாக 5000 ரூபாவும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட கண்டாவளை சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஜெயானந்தராசாவையும் சிரேஷ்ட பிரஜைகள் குழு உறுப்பினர்களையும் காணலாம். (112)

# ஐக்கியமக்கள் முன்னணியின் தேர்தல் செயலகம் கிளிநொச்சியில்




வட மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பாக போட்டியிடும் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் செயற்பாட்டுக்கான தேர்தல் செயலகம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாலரும் அமைச்சருமான சுசில் ஜயந்த சிறுவர் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஆகியோர் இணைந்து இச்செயலகத்தினை திறந்து வைத்தனர்.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நடைபெறவுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்த லில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கட்சிகளும் பல வேட்பாளர்களும் போட்டியிடுகின்ற போதும் இரு கட்சிகளுக்கிடையே கடுமையான போட்டி நிலவுகின்றது அதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் இம்மாவட்ட மக்களின் மேம்பாட்டுக்காக மக்களோடு இணைந்து மிகக் கடுமையாக உழைத்திருக்கின்றோம் அதனடிப்படையில் மாவட்டம் அனைத்துதுறைகளிலும் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை எட்டியுள்ளது.

இருப்பினும் எமது மக்கள் இன்னமும் பலதேவைகளை எதிர்நோக்கியவர்களாகவே காணப்படுகின்றார்கள் அந்தவகையில் இத்தேர்தலில் நாம் பெறப் போகும் வெற்றியானது போட்டியாளர்களுக்கோ கட்சிக்கோ கிடைத்த வெற்றியாக அமையப் போவதில்லை அதுமக்களுக்கான வெற்றியாகவே அமையும் அது மக்களின் நலன்களுக்கும் அவர்களின் எதிர்காலத்திற்குமான வெற்றியாகவே அமையும் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட முதன்மை வேட்பாளர் வை.தவநாதன், வேட்பாளர்களான அன்ரன் அன்பழகன், க.பிரகலாதன் ஆகியோரும் மற்றும் மகாதேவன் ஆகியோரும் பிரதேசசபை உறுப்பினர்களான கிருஸ்ணசாமி, இராமச்சந்திரன் ஆகியோரும் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

# பிரதேச சபை நிதியில் புத்தகக் கொள்வனவு

## தினமுரசு செய்திக்கு கைமேல் பலன்

கனடா-பூநகரி அபிவிருத்தி நிறுவனத்தால் பூநகரி பிரதேசசபைக்கு 16 மாதங்களுக்கு முன்பாக அனுப்பப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா நிதி செலவிடப்படாமல் அவ்விடயத்தில் நிர்வாகத்தினரின் அசுமந்தப்போக்கையிட்டு மாணவர் சமுதாயம் தம் அதிருப்தியை தெரிவித்திருந்தது.

இந்நிலையைச்சுட்டிக்காட்டிய 'தினமுரசு'மாணவர்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டிய நிதியை செலவிட்டு புத்தகங்களைக் கொள்வனவு செய்து மாணவர் பயன்பாட்டுக்கு விடவேண்டுமென கோரிக்கை விட்டிருந்தது. இதுவிடயமாக அண்மையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து புத்தகங்கள் கொள்வனவு செய்யும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பூநகரி பிரதேச சபை உறுப்பினர் தி. ஆனந்தவர்ணன் முரசுக்கு தெரிவித்தார். (112)

# சுன்னாகம் சந்தையில் மரக்கறி விலை உயர்வு

(சுன்னாகம்)

சுன்னாகம் சந்தையில் மரக்கறிகளின் விலை ஏனைய யாழ் குடாநாட்டு சந்தைகளுடன் ஒப்பிடுமிடத்து உயர்வாக காணப் படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுன்னாகம் சந்தையில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மருதனார்மடம் சந்தையில் விற்பனையாகும். மரக்கறிகளின் விலையுடன் ஒப்பிடும் போது சுன்னாகம் சந்தையில் விலை மிகவும் அதிகமாக காணப்படுவது குறித்து உரிய தரப்பினர் கவனம் எடுக்காமை குறித்தும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# தமிழைக் கொல்லும் விளம்பரம்

(வடவரணி)

வடவரணி கறுக்காய் பகுதியில் உள்ள வீதிச் சுவரொன்றின் மேல் தனியார் நிறுவனம் விளம்பரம் ஒன்றை மக்கள் பார்வைக்கு எழுதியுள்ளது. அந்த விளம்பரத்தில் தமிழ் மொழி கொலை செய்யப்பட்டு பிரசுரமாகி உள்ளது. (150)

# தரம் குன்றாத பண்பாடு நெஞ்சம் நெகிழும் காட்சி

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலை.கிறிஸ்தவ பாரம்பரியத்தில் உருவானது. க.பொ.த உயர்தரப்பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பரீட்சை மண்டபத்தை நோக்கி தாயார் தனது மகனை 'சூட்டிப் பப்' மோட்டார் சைக்கிளில் ஏற்றி வருகிறார். பாடசாலை நுழைவாயிலை அண்மித்ததும் இருவரும் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்குகின்றனர். தாயின் பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றான் அந்த மாணவன் தனது மகனின் சிரசில் கரங்களை வைத்த ஆசி வழங்குகிறாள் அந்தத்தாய் பரீட்சை மண்டபத்தை நோக்கி உற்சாகத்துடன் செல்கிறான்.அந்த மாணவன் .பெற்றோரை எதிர்த்துப் பேசுகின்ற பெற்றோர் ,ஆசிரியரை மதிக்கத் தவறும் மாணவர்கள் நிறைந்துள்ள இன்றைய சமூகத்தில் இப்படியான மாணவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சில பாடசாலைகளில் பொதுப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை வழங்கும் போது அதிபர், ஆசிரியர்களோடு பெற்றோரையும் அழைத்து அவர்களில் பாதங்களில் பணிந்து வணங்கி ஆசி பெறச் செய்வது வழக்கம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு சில மாணவர்கள் பெற்றோர் ஆசிரியர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்காது அனுமதி அட்டைகளைப் பெற்றுச் செல்வதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ள நிலையில் பரீட்சை மண்டப நுழைவாயிலிலும் தாயிடம் ஆசி பெறும் அந்த மாணவனின் செயற்பாடு போற்றத்தக்கதே. (10)

# சில்ப கைப்பணி விழாவில் முதற்பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட சில்ப 2013 தேசிய கைத்தொழில் கைப்பணி விழாவின் மூன்றாம் நாளான கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் முதற்பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சிக் கூடத்தில் மேற்படி விழா இடம்பெற்றுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முதற்பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ உள்ளிட்ட அதிதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதான வாயிலில் வரவேற்றதைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்துறைகளை மேம்படுத்தும் பொருட்டும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக இவ்விழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனூடாக குறித்த கைத்தொழிற்துறைசார்ந்தோரது வாழ்வாதாரம் மேம்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.


இதனிடையே இவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்துறைகளை அறிமுகப்படுத்தி மேம்படுத்தும் வகையிலும், தமக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சந்தைவாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு இக் கண்காட்சியை ஏற்பாடு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறைசார்ந்தோர் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

தொடர்ந்து கண்காட்சிக் கூடங்களுக்கு விஜயம் செய்த முதற்பெண்மணி மற்றும் ஏனையோரும் காட்சிப்படுத்தப்பட்டிருந்த ஆக்கம் மற்றும் உற்பத்திப் பொருட்களை பார்வையிட்டனர்.

இதன்போது சிரேஸ்ட அமைச்சர் எ.எச்.எம் பௌசி, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி, தென்மாகாண .ஆளுநர் குமாரி பாலசூரிய, தென்மாகாண கைத்தொழில் அமைச்சர் யு.வி.ஆர் ஆரியதிலக, வடமத்திய மாகாண கைத்தொழில் அமைச்சர் கே.எச். நந்தசேன, கிழக்கு மாகாண கைத்தொழில் அமைச்சர் நசீர் அகமட், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி ஆகியோருடன் இந்தியா மற்றும் கொரியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

சில்ப 2013 தேசிய கைத்தொழில் கைப்பணி விழா நாளையதினம் இறுதிநாளாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பின் செயற்பாடுகள் நாகரிகத்திற்கு ஒவ்வாதது



தமது தேர்தல் வெற்றிக்காக தமிழ்மக்களின் உயிர் - உடல் இழப்புக்களை பயன்படுத்தும் கூட்டமைப்பின் செயல் மனித நாகரிகத்திற்கு ஒவ்வாத அதி கீழ்த்தரமான செயற்பாடு என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், வடமாகாண சபைத் தேர்தலில் ஐ.ம.சு.முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு ஈ.பி.டி.பி.யின் தேர்தல் பிரசார ஒன்றுகூடல் நிகழ்வுகள் அண்மையில் தெல்லிப்பளை பிரதேசத்தில் பல்வேறுபட்ட இடங்களில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது மக்களின் வாழ்வாதார மற்றும் அவரகளின் அபிவிருத்தி தொடர்பான தேவைகளை நிறைவேற்றுவதில் ஈ.பி.டி.பி கட்சி எப்போதும் பின்னின்றதில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் வடபகுதி விரைவாக அபிவிருத்தியடைந்து வருகிறது என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

1990 இல் தீவகத்தில் ஈ.பி.டி.பி கட்சி கால் பதித்தது தொடக்கம் இன்று வரை தொடந்தும் தமிழ் மக்க ளின் வாழ்வாதார மேம்பாட் டுக்கான நடவடிக்கைகளையும், போரினால் அழிவடைந்த வடக்கில் துரித அபிவிருத்தியினையும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம்.

இதேவேளை எமது இணக்க அரசியலின் மூலம் தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளிற்கும், அவர்களின் நீண்ட காலப் பிரச்சினைகளிற்கும் தீர்வு காணமுடிந்தது. சாத்தியமான நடைமுறையில் தளராத நம்பிக்கைகொண்டு எமது மக்களின் அரசியல் உரிமையை வென்றெடுக்கும் எமது தலைவரின் தலைமையில் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை பெற்றெடுக்க முடியும்.

எனவே உண்மையின் வழியில் நில்லுங்கள். நிச்சயம் நாம் வெல்வோம். ஒருமித்த மக்களாதரவின் மூலம் வடக்கில் எமது உரிமையை நிலை நாட்ட கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரியான வழியில் பயன்படுத்துங்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலே உங்களுடைய சிந்தனைகள் தெளிவானபாதைகள் நோக்கியும் சரியான தலைமையை நோக்கியதாகவும் இருக்கும் என நம்புவதுடன் சமுதாயத்திற்கு சரியான பாதையினைக்காட்டவும் தவறமாட்டீர்கள் என நம்புகிறேன். எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வுகளில் ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடமாகாண சபைத் தேர்தலில் ஐ.ம.சு. முன்னணியின் சார்பில் போட்டியிடும் ஈ.பி.டி.பி வேட்பாளர் தவராசா, ஈ.பி.டி.பி.யின் வலிவடக்கு பிரதேச இணைப்பாளர் அன்பு ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



யாழ். மாவட்ட காணிப்பதிவக முகாமைத்துவ உதவியாளர் பரா.ரமேஸ் நீதி அமைச்சினால் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் - ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். அகில இலங்கை இளங்கோ கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினரான இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார். தேசிய ரீதியில் நடைபெற்ற பலபேச்சு கவிதைப் போட்டிகளில் சாதனைகளை நிலை நிறுத்திப் பலவிருதுகளைத் தனதாக்கிக் கொண்டவர். “அன்புப் பிள்ளைகளே” சிறுவர் நூலின் ஆசிரியரான இவர் தென்புலோலியூர் நாடகச் சக்கர்வர்த்தி கலாபூசணம் பரஞ்சோதி பரராஜசேகரம் தம்பதிகளின் புத்திரரென்பதும் குறிப்பிடத்தக்கது. (01)

# அத்துமீறி மீன்பிடி

நெடுங்கேணி குளங்களில் அத்துமிறி மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெறுவதாக வவுனியா வடக்கு மீனவ சங்கப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். நெடுங்கேணியில் உள்ள மருதோடைக்குளம், பெரியகுளம், இலுப்பைக்குளம், நெடுங்கேணிக்குளம் ஆகியகுளங்களில் தடைசெய்யப்பட்ட வலைகளான சுருக்குவலை, தங்கூசிவலை, போன்றவலைகளைப் பயன்படுத்தி மீன்களைப் பிடிப்பதினால் குளங்களில் விடப்பட்ட மீன் குஞ்சுகளும் இவ் வலையில் சிக்கி மீன் இனம் அழிந்து வருவதாக வவுனியா வடக்கு மீனவர்சங்கப் பணிப்பாளர் தெரிவித்தார். (40)



நவாலி சென்.பீற்ரஸ் தேவாலயத்தில் மடு மதா உற்சவத்தையொட்டி மாதாவுக்கு திருப்பலி பூசை, திருப்பலி என்பன ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூபத்தினை பெண்கள் வடம்பிடித்து வீதி வழியாக இழுத்துச் செல்வதைக் காணலாம். (104)



# பதிவிறக்கப் பெட்டகம்

நமது சமுதாயத்தில், ‘நல்லது’ செய்பவர்களுக்கும், அவர்களின் பார்வையில் சும்மா இருந்து வாழ்க்கையை ‘வீணடிப்பவர்களுக்கும்’ இடையே எப்போதுமே விவாதங்கள நடந்துகொண்டே இருக்கும். சமுதாயத்துக்கு நாம் நல்லது செய்கிறோம் என்ற எண்ணம் மிகவும் போதை தரக்கூடியது. அந்த எண்ணத்தில் சிக்கிக்கொண்டுவிட்டால் அது நம்மை சிறுகச்சிறுக அரிக்க ஆரம்பித்து, ஒரு நாள் முற்றிலும் அழித்து விடும். இதற்கு மிகச்சில விதிவிலக்குகளே உண்டு. கூடவே, இந்த எண்ணம், இந்த நபர்கள் தங்களைப போல் இப்படியெல்லாம் சமுதாயத்தின் மேன்மைக்காக தியாகம் செய்யாமல் தான் பாட்டுக்கு வாழ்க்கையை ஓட்டிக கொண்டிருக்கும் நபர்களின் மீது விமர்சனங்கள் வைக்கவும் காரணமாக இருக்கும். அந்த நபர்கள் பாவம் அன்றாட வாழ்க்கையில் ஆயிரத்தெட்டு உளைச்சல்களுக்கு நடுவே தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்ற உழைத்துக கொண்டிருப்பார்கள். அவர்களிடம் போய் “வாய்யா... இந்த சமுதாயத்துக்கு உழைத்து அவர்களை முன்னேற்றலாம்” என்று சொன்னால் பீதி அடைந்து நம்மைவிட்டு ஓடத்தான் செய்வார்கள்.

ஆனால், வாழ்க்கை எப்படிப்பட்டது? ஒவ்வொருவருக்கும வாழ்க்கையின் மீது ஒவ்வொரு கருத்து இருக்கிறது. சிலர் நிஜமாகவே சமுதாயத்துக்கு தன்னால் இயன்றதை செயயக்கூடும். சிலர் மனதார வாழ்க்கையை அவர்கள் பாணியில் இரசித்து மகிழக்கூடும். இந்த இரு சாராரில் யார் மேல்? யார் கீழ்?

Ship of Theseus படத்தில் இந்தக் கேள்வியை நவீன் என்ற கதாபாத்திரம், தனது பாட்டியை நோக்கிக் கேட்கிறது. அவனது பாட்டி, ஒரு களப்பணியாளர். மக்களுக்காக உழைபபவர். அவரது கால் உடைந்து சிகிச்சை பெறும்போது மருததுவமனையில் தனது பேரன் நவீனிடம் பேசுகிறார். இயலபான பேச்சினிடையே இருவரின் எண்ணங்களும் மோதுகின்றன. பாட்டி, தனது வாழ்க்கை உபயோகமாக கழிந்ததைப் பற்றி சொல்ல, நவீனுக்கு கோபம் வருகிறது. “நானசம்பாதிக்கிறேன். குடிக்கிறேன். வாழ்க்கையை அனுபவிககிறேன். என் பார்வையில் யாருக்கும் பிரச்சினையின்றி என் காலம் சென்றுகொண்டிருக்கிறது. அப்படியென்றால் உன் பார்வையில் நான் ஒன்றுக்கும் உதவாதவன் தானே? ஊர் ஊராகப் போய் ‘ஆணுறை அணியுங்கள்’ என்று கோஷம் இட்டாயே? அவர்கள் யாராவது நீ சொல்வதைக் கேட்டிருந்தால் இந்திய மக்கள் தொகையான ஒரு பில்லியன் கொஞ்சமாவது குறைந்திருக்கும்தானே? ஏன் அது நடக்கவில்லை?” என்று பாட்டியை நோக்கி கத்துகிறான். இருவரில் யாருமே தவறாகப் பேசவில்லை என்பது அந்தக் காட்சியில் தெரியும்.

இன்னொரு காட்சி. மைத்ரேயர் ஒரு சாது. ஆனால் மிகவும் ப்ராக்டிகலாக ஆன்மீகத்தையும் வாழ்க்கையையும் அணுகுபவர். இவர், மிருகங்களின் மீது தங்களது மருந்துகளை பரிசோதனை செய்யும் நிறுவனங்கள் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார். அப்போது அது சம்பந்தமாக தனது வக்கீலுடன் பேசும்போது, அவரது ஜூனியரான ‘சார்வாகன்’ என்ற வக்கீலின் பேச்சு அவருக்குப் பிடித்துப் போகிறது.

‘சார்வாக மதம்’ என்றே ஒரு மதம் இருந்திருக்கிறது. இந்த மதத்தின் அடிப்படை தத்துவம் – Hedonism என்று அழைக்கப்படும் இன்பம் துய்த்தல். அதாவது, ‘கடவுள் இல்லை. மறுபிறப்பும் இல்லை. இந்த வாழ்க்கை ஒன்றே உன் கையில் இருக்கும் வஸ்து. எனவே இஷ்டத்துக்கு அனுபவி. இன்பத்தில் திளைத்து பேரின்பம் அடை’ என்று போதித்த மதம் அது.

சார்வாகன், தன் வாழ்க்கையை தன் இஷ்டப்படி வாழும நபர். ஆனால், உலகின் 99% மக்களைப்போல், பிறருக்கு தீங்கு செய்யாமல் வாழவேண்டும் என்ற கருத்து மட்டும் அவனது மனதில் இருக்கிறது. மைத்ரேயர் தொடர்ந்திருக்கும் வழக்கைப் பற்றி சார்வாகன் பேசுகையில், “மனித குலத்தின் நன்மைக்குத்தானே மருந்துகள் மிருகங்களின மேல் பரிசோதிக்கப்படுகின்றன? ஒரு நல்ல விஷயத்துககாகத்தானே அந்த விலங்குகள் சாகின்றன? அது எப்படி தவறாகும்?” என்று கேட்கிறான். அதற்கு அவனது சீனியர், “மைத்ரேயர் மனித குலத்தின் மேன்மைக்காக பாடுபடவில்லை. எல்லா உயிரினங்களுமே சமம் என்று நினைப்பவர் அவர். அதற்குத்தான் உழைத்துக்கொண்டிருக்கிறார்” என்று சொல்கிறார். இந்த வசனம் மிகவும் அற்புதமான கருத்து ஒன்றினை மிகவும் எளிமையாக சொல்கிறது.

– கருந்தேள்




# உண்மையைச் சொல்கிறேன்

வெகுகாலத்துக்கு முன் பழமுதிர்சோலை என்ற நாட்டை மன்னன் பழவர்த்தன் ஆண்டுவந்தார். அவர் நீதிநெறி தவறாதவர். வாய்மை நிரம்பியவர், உண்மைபேசுபவர். தன்னைப்போலவே தனக்கும் மக்களும், இருக்கவேண்டும் என்று விரும்புபவர். அவருக்கு திருமணமாகி நீண்டநாட்களாகியும் குழந்தைகள் இல்லை. தனக்குபின் தன்நாட்டை ஆளத்தக்கவாரிசுகள் இல்லாததால் தன் நாட்டு மக்களில் நீதியும், நேர்மையும்தவறாத உண்மையான ஒரு இளைஞனைக்கண்டு பிடித்து, அவனை மன்னனாக்க வேண்டும் என்றுவிரும்பினார்.


இதற்காக யாருடைய ஆலோசனையையும் நாட வில்லை. அவரே மிகச்சிறந்த அறிவாளியாக, இருந்தபடியினால், பலநாட்கள் யோசித்து ஒரு முடிவு செய்தார். நாட்டில் உள்ளவீரம்மிக்க, இளைஞர்களை அழைத்துவில்போட்டி நடத்தினர். அதில்வென்றவர்களை அழைத்து, வாள்போட்டி நடத்தி பரிசீலனை செய்தார். அதன்பின் வாய்மொழிக் கேள்விகள், சமயோசிதமான கேள்விகள் என்று இரானுவத்துக்கு ஆள்எடுப்பதைப்போல அவர்களைச் சோதித்தார். கடைசியாக, பத்து இளைஞர்கள் தேறினர். அவர்களை மன்னர் அழைத்து அவர்கள் அனைவரிடமும் தனித்தனியாக ஒருசெடியின்விதையைக்கொடுத்தார். இந்தவிதையை ஒருதொட்டியில்போட்டு வளர்த்து, கவனமுடன் கண்காணித்து, ஆறுமாதம் சென்றபிறகு, வளர்த்தசெடியுடன் என்முன்வர வேண்டும். இதுதான்நான் உங்களுக்கு வைக்கக்கூடிய இறுதிகட்டசோதனை என்றார்.

பத்துப்பேரும் அதனை வாங்கிக்கொண்டனர். அதில், சாந்தனு என்ற வாலிபன் ஒருவனும் இருந்தான். எல்லாரும் மன்னர் சொன்னபடி அந்தவிதையைத்தொட்டியில் போட்டுச்சிறந்த உரங்களையும், எருவையும், இட்டுவளர்க்க ஆரம்பித்தனர். சாந்தனுவும் அப்படியே செய்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ அவனது விதை முளைத்துச்செடியாக வில்லை. மற்றவர்களின் வீட்டுக்குப்போய் அவர்கள் செடிவளர்ந்திருக்கிறதா என்றுஅவன் கண்காணித்தான். என்ன ஆச்சரியம்! மற்றவர்களின் விதையானது நன்றாகமுளைவிட்டு, இலைவிட்டுச்செழித்து வளர ஆரம்பித்திருந்தது. வீட்டுக்கு வந்தசாந்தனு தன்னிடமுள்ள விதை செடியாக எல்லாவிதமான முயற்சிகளையும் செய்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ, அந்த விதை முளைக்கவில்லை.

முளைக்காத விதையை ஒருவேளை மன்னர் தனக்குத் தந்திருப்பாரோ? என்று எண்ணினான்.

மறுகணமே, ச்சே...என்னமோசமான எண்ணம்... எல்லாருக்கும் கொடுத்ததுபோல தான் எனக்கும் கொடுத்தார். என்விதை முளைக்கவில்லை என்றால், அது என் துரதிருஷ்டம். மற்றவர்கள் விதை எல்லாமே முளைத்திருப்பது அவர்களுடைய அதிரஷ்டம். ஆறுமாதம் வரைபொறுத்திருந்து பார்ப்போம்... அப்போதும் விதைமுளைக்காவிட்டால், அரசே, என்விதை மட்டும் முளைவிக்கவில்லை! என்று உண்மையைக் கூறிவிடுவோம். அதற்காக மன்னரை நான் சரியாக செடியைப் பராமரிக்கவில்லை என்று கருதி எனக்குத் தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வோம்! என்று கருதினான்.

ஆறுமாதம் சென்றன. வெற்றிப் பெருமிதத்துடன் மீதியுள்ள ஒன்பது பேரும் தங்கள் கையில்தொட்டியை ஏந்தி வந்தனர். அதில் இரண்டடி நீளத்துக்குச் செடி வளர்ந்திருந்தது. அது ஆரோக்கியமாக இருந்தது. மன்னர் எல்லாருடைய தொட்டிகளையும் பார்த்துக் கொண்டே வந்தார்.



அவர் இதழ்களுக்கிடையில் புன்முறுவல் ஒன்று நெளிந்தது. சாந்தனுவிடம் வந்ததும் அவன்காலித் தொட்டியுடன் நிற்பதைக்கண்டவுடன் மன்னர் முகம்மாறியது. நடுநடுங்கிப்போனான்சாந்தனு. அவனையே உற்றுப் பார்த்த மன்னர் அவனிடம் அதிகாரமாககேட்டார், உன்னுடையபெயர்என்ன? என் பெயர் சாந்தனு அரசே! தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். நான் ஆறுமாத காலமாக இந்த விதையைச் செடியாக்க எவ்வளவோ பாடுபட்டேன். ஆனால், உண்மையிலேயே என்னால்அதைச் செடியாக்க முடியவில்லை. என்னை நம்புங்கள் அரசே! என்று மண்டியிட்டுக் கதறினான்.

மன்னர் கீழே குனிந்து அவனைத்தூக்கி நிறுத்தித் தன் மார்போடு அணைத்துக்கொண்டார். எதிர்கால மன்னனைத்தேர்ந்தெடுக்கவே இப்போட்டிகளை வைத்தேன். அதில் வென்றவனாக இந்த சாந்தனுவை அறிவிக்கிறேன். இவன் தான் எதிர்கால மன்னன்! என்றார். இதைக்கேட்ட அனைவரும் வியப்படைந்தனர். முதல்மந்திரிஎழுந்து, அரசே, தாங்கள் சொன்னபடி ஒருசெடிகூட வளர்க்கத் தெரியாத இந்தவாலிபனா எதிர்காலமன்னன்? மன்னருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செடியைக்கண்ணும் கருத்துமாகப் பராமரிக்காமல்சோம் பேறித்தனமாக இருந்து விட்டு, வெறும் பூந்தொட்டியைக் காட்டியவனா, இந்த நாட்டு மன்னன்? என்று கேட்டார். அமைச்சரே, நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள்.

இவன் அவனால் ஆகக்கூடிய முயற்சிகளைஎல்லாம் செய்து பார்த்தான் என்பதை நான் நம்புகிறேன். ஏன் தெரியுமா? நான் பத்து இளைஞர் களுக்கும் செடி வளர்க்கக் கொடுத்த பத்து விதைகளும் நன்றாக வேகவைக் கப்பட்டு உலர்த்தப் பட்ட விதைகள். அதில் எந்தச் செடியும் முளைக்காது. என்னிடமிருந்து பரிசுகளோ பதவியோ பெறுவதற்காக மற்ற இளைஞர்கள் வேக வைக்கப்பட்ட விதைகளைத் தூக்கிஎறிந்து விட்டு, அதற்குப் பதிலாக அதேபோன்ற நல்லவிதைகளை வாங்கிப் பயிரிட்டுச் செடிகளாக்கிக் கொண்டு வந்திருக்கின்றனர். ஆனால் சாந்தனு அப்படிச் செய்யவில்லை. அரச கட்டளையை ஏற்று ஆறுமாதகாலம்போராடிப் பார்த்திருக்கிறான். விதை முளைக்கவில்லை என்றதும், அதை உள்ள படியே என்னிடம் அறிவிக்கக் காலித்தொட்டியுடன் வந்தான்.

உண்மையைச் சொல்லும் போது என்னால் அவனுக்குத் தண்டனை ஏற்பட்டால்கூட அதைத் தாங்கச் சித்தமாயிருந்திருக்கிறான் என்பதை அவன்செயல், பார்வை, பேச்சு வார்த்தை, நடத்தை மூலம் அறிந்து கொண்டேன்.

இப்படி நேர்மையாக நடந்துகொண்டதன் மூலமாக அவனால் நிச்சயம் நாடுசெழிக்கும்“என்று தான் அவனை மன்னனாக அறிவித்தேன். மன்னரின் அறிவுக் கூர்மையைஎண்ணி அனைவரும் வியந்து பாராட்டினர். அங்கிருந்த செடிவளர்த்தஏனைய, இளைஞர்கள் அரசனிடம் மன்னிப்புக் கோரினர். அரசனும் அவர்களை மன்னித்தார்.


## விடுகதைகளும் விடைகளும்

1. தலையைச் சீவினேன் தாகம் தீர்ந்தது. - அது என்ன?
2. தச்சன் செய்யாத பெட்டி தானே திறந்து மூடும் பெட்டி- அது என்ன?
3.தேடாமல் கிடைப்பதுதேடும் செல்வத்தைக் குறைப்பது. - அது என்ன?
4. நான் ஏறும் குதிரை, நாலு கால் குதிரைஅந்தக் குதிரைக்கு ஆயிரம் கண்கள். - அது என்ன?
5. டாக்டர் வந்தார் கோட்டைக் கழற்றினார்கேணிக்குள் குதித்தார். - அது என்ன?
6. தளதள மேனிக் கெம்புக்கல் தவழ்ந்து செல்லும் கெம்புக்கல் நீரில் மிதக்கும் கெம்புக்கல் நித்திரை கெடுக்கும் கெம்புக்கல். - அது என்ன?
7. வளைந்த தங்கக் கம்பிவானத்திலே போட்ட கம்பிஎடுக்க வராத கம்பி எட்டிப் பிடிக்க முடியாத கம்பி. - அது என்ன?
8. விரிந்தால் நான் அவனுக்குள் அடக்கம்மடக்கினால் எனக்குள் அவன் அடக்கம். - அது என்ன?
9. நீல நிறத் தோட்டத்திலேமஞ்சள் பூ பூத்திருக்கு. - அது என்ன?
10. தண்ணீரும் மழையும் இல்லாமல் பயிர் பச்சையாய் இருக்கிறது பாக்கு வெற்றிலை போடாமல் வாய் சிவப்பாய் இருக்கிறது. - அது என்ன?

விடைகள்
1.இளநீர் 2.கண் 3.சோம்பல் 4.கட்டில்
5.வாழைப்பழம் 6.மூட்டைப்பூச்சி
7.மின்னல் 8.குடை 9.பௌர்ணமி நிலா
10.கிளி

## மூளைக்கு வேலை புதிர்

மேலே உள்ள படத்தில் காணப்படுவது பெரிய றோட்டுகளில் உள்ள Manhole என்றழைக்கப்பெறும் மனிதக் குழி ஆகும். இவை றோட்டின் கீழ் அமைக்கப் பெற்றுள்ள வயர் தொடர்புகளையும், கழிவுநீர் பாதையையும் இதனூடாக தொழிலாளர்கள் கீழ் இறங்கி சீர் செய்வதற்கான உள்ள நுளைவாயிலாகும். இவைகளை அனேகமாக எல்லோருமே பாத்திருக்கின்றோம்.



அவற்றின் வாயில் வட்ட வடிவில் அமைந்திருக்கும். சதுரமாக அல்லது நீள்-சதுரமாக அமைக்காது அதன் வாயையும், மூடியையும் வட்ட வடிவில் அமைத்தமைக்கு காரணம் என்னவாக இருக்கலாம்?

பதில்: நீள் வடிவமாக, அல்லது சதுர வடிவமாக இருந்தால் அதன் மூடி மூலைப்பாட்டின் பக்கமாக (மூலை விட்டம் நீளமாக இருப்பதால்) உள்ளே விழும் சந்தர்ப்பம் அதிகம். அதனைத் தவிர்ப்பதற்காகவே மூடியும், வாயிலும் வட்ட வடிவமாக அமைந்துள்ளது.

# தரம் 09 மாகாண மட்டப் பொதுப் பரீட்சைக்கான வழிகாட்டி

தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆசிரியர்: ப.கோகுலன்

சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக

1) தாயும் தந்தையும் நல்லவர்கள்
1) கள் 2) அர் 3) உம் 4) ஏ

2) மொழிமுதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து
1) ஆ 2) யா 3) எ 4) ஏ

3) மொழி முதலில் வினா எழுத்து பெற்று வந்த சொல்
1) அவனா 2) யாவை 3) நானா 4) அவளோ

4) அவர்களுக்குள் இவனோ நல்லவன் இவ் வாக்கியத்தில் வந்துள்ள இடைச்சொல்
1) ஓ 2) ள் 3) ன் 4) ஏ

5) கமலன் படம் வரைந்தான். இவ்வாக்கியத்தில் வந்துள்ள இடைச்சொல்
1) அன் 2) ஐ 3) ஏ 4) ஆன்

6) வேந்தே! வாழ்க. நின்கொற்றம். கொற்றம் என்பதன் கருத்து
1) சுற்றம் 2) குற்றம் 3) வெற்றிமுரசு 4) வெற்றி

7) எண்பதாவது ஆண்டு இறுதியில் கொண்டாடப்படும் விழா
1) பொன்விழா 2) மணிவிழா
3) பவளவிழா 4) அமுதவிழா

8) ஆதரவற்றோருக்கு உணவும் உறையுளும் அளித்து காக்கும் இடம்
1) வைத்தியசாலை 2) அலுவலர் சாலை
3) பாடசாலை 4) வாசிகசாலை

9) அவளுக்கு எவ்வித இடையூறும் நிகழாது பாதுகாக்க வேண்டியது எனது பொறுப்பு.
1) இடையீடு 2) குறுக்கீடு
3) துன்பம் 4) வேறுபாடு

10) அவன் நேற்று வந்திலன். இவ்வாக்கியம்
1) உடன்பாட்டு வாக்கியம் 2) வினா வாக்கியம்
3) எதிர்மறை வாக்கியம் 4) வியங்கோல் வாக்கியம்

11) கவனமாக படித்தால் சித்தியடைவாய். இவ்வாக்கியம்
1) எதிர்மறை வினை வாக்கியம்
2) வியங்கோள் வாக்கியம்
3) உடன்பாட்டு வினை வாக்கியம்
4) ஏவல் வாக்கியம்

12) நானும் அவனும் நேற்றுக்காலை
1) இவ்விடம் வருவோம் 2) இவ்விடம் வந்தேன்
3) இவ்விடம் வந்தோம் 4) இவ்விடம் வந்தது

13) பணம் இல்லாதவன் பிணம் என்பது நம்நாட்டில் வழங்கும்
1) புத்தம் புதுமொழி 2) பழுத்துக்கனிந்த பழமொழி
3) பழந்தமிழ் செய்யுள்மொழி 4) கவிஞர் கனிமொழி

14) ஏழைகளுக்கு உண்ணும்போது ஒருகைப்பிடி கொடுத்தல்
1) மிகச் சிறந்த அறமாகும் 2) மிகப்பெரும் குற்றமாகும்
3) மிகச் சிறந்த அரமாகும் 4) மிகப்பெரும் அரமாகும்

15) படையெடுத்து சென்றபோர் வீரர் தங்குமிடம்
1) மாடிவீடு 2) வர்ணசாலை
3) அந்தப்புரம் 4) பாடிவீடு

**பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

16) பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் ---------------------

17) நகையும் பரிகாசமும் பொருந்த கவிபுனையும் ஆற்றல் படைத்தனவன்.
---------------------

18) ஒருநூலை வெளியிடுவோர் எழுதும் உரை
---------------------

19) நாடகம், நாட்டியம், நூல் முதலியவற்றை பலரும் அறியும் படி செய்தல்
---------------------

20) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து உறுப்புக்கள்

## பகுதி - 2

1, 2, 3, 4 ஆம் வினாக்களுக்கும் 5, 6, 7 ஆம் வினாக்களுக்கும் ஏதாவது ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக?

1) சந்தர்ப்பம் கூறல்

i. நல்லா இருக்கே எல்லார் உடம்பிலும் ரெத்தம் தான் ஓடுது.
யாரால் :-
யாருக்கு:-

ii. என்ன மூட்டையாரே
யாரால் :-
யாருக்கு:-

iii. ஓகோ மூட்டை பெரிய கதையே சொல்லும் போலிருக்கிறதே
யாரால் :-
யாருக்கு:-

iv. யோவ் என்ன சௌக்கியமா
யாரால் :-
யாருக்கு:-

2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக?

1) பாடம் புகட்டும் பழமொழிகள்
2) கல்வியின் சிறப்பு
3) நான் விரும்பும் தொழில்
4) நீர் அறிந்த சிரிப்பூட்டும் ஒரு சின்னக்கதை

3) விடுமுறைக் காலத்தை எவ்வாறு களித்தீர் என உமது நண்பனுக்கு 75 சொற்களுக்கு குறையாமல் ஒரு கடிதம் எழுதுக?

4) விரும்பிய 8 வினாக்களுக்கு விடை தருக

1) பழம் என்ற பாடப்பரப்பில் ஆசிரியர் மலையினை எவ்வாறு வர்ணிக்கின்றார். இதனை சுருக்கமாக தருக?
2) செல்வனுக்கும் உழவனுக்கும் இடையே காணப்படும் உறவுமுறையினை நீர் எவ்வாறு எடுத்துக் காட்டுவீர்?
3) இலங்கையின் தமிழ் கல்வி மரபுக்கு புத்துயிர் வழங்கியவர் யாவர்?
4) முரட்டு முதலைகள் என்ற பாடப்பரப்பில் முதலைகளின் நீளம் எவ்வாறு இருக்கும்.
5) முதலைகள் எவ்வாறு தோற்றம் பெறுகின்றன?
6) முதலை இனம் எத்தனை வகைப்படும்?

7) நாட்டார் பாடல் என்னும் பாடப்பரப்பில் தாலாட்டு பாடல் என்ற கருவில் தாய் தனது குழந்தையை எவ்வாறு எல்லாம் வர்ணித்துள்ளார்.

8) நாட்டார் பாடல்களின் மறு பெயர்கள் எவை?

9) நாட்டுப் புறவியலின் பிரிவுகள் எவை?

10) நாட்டார் பாடல் என்றால் என்ன?


# க.பொ.த. (சாதாரண தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

நேரம் 3 மணி

விஞ்ஞானம் பகுதி - II

ஆசிரியர்: T.கஜேந்திரன்

01) வளிமண்டலத்தில் நைதரசன் வாயுச் சதவீதம் உயர்வானது. தாவரத்துக்கு நைதரசன் தேவையாயினும் அதற்கு மிகக் குறைவாகக் கிடைக்கும் மூலகங்களுள் அதுவும் ஒன்றாகும். இயற்கையில் நைதரசன் சுற்றோட்டமாகச் செல்லும் வட்டம் கீழே தரப்பட்டுள்ளத,




1) மேற்படி வட்டத்தின் இடைவெளிகளில் பொருத்தமான சொல்லை - சொற்களை இட்டு பூர்த்தி செய்க.

a -------------------------------- b --------------------------------

c -------------------------------- d --------------------------------

e --------------------------------

2)

a. அங்கிகளின் உடலில் நைதரசன் எந்தச் சேர்வைகளாகக் காணப்படும்?

b. விலங்குகளுக்குத் தேவையான நைதரசன் தேவைகள் பிரதானமாக எவ்வாறு கிடைக்கும்?

3) சில நுண்ணங்கிகளுக்கு வளியில் உள்ள நைதரசனை நேரடியாக நைதரசன் சேர்வைகளாக மாற்ற முடியும். அதற்கான உதாரணம் ஒன்று தருக.

4)

a. அங்கிகளின் இறந்த உடலில் காணப்படும் நைதரசன் சேர்வைகளால் அமோனியா வாயு உருவாகும். அமோனியாவின் சூத்திரத்தை எழுதுக.

b. N=14, H=1 ஆயின் அமோனியாவின் மூலக்கூற்று நிறையைப் காண்க.

5)


a. வளி மண்டலத்தில் ஓசோன் வெறுமையாதலுக்கு பொறுப்பான இரசாயனப் பதார்த்தங்களின் பிரதான கூட்டம் யாது?

b. அவ் இரசாயனப் பதார்த்தத்தை பிறப்பிக்கும் ஒரு மூலம் - சாதனத்தைக் குறிப்பிடுக.

c. ஓசோன் வெறுமையாதலின் ஒரு சூழல் விளைவையும் அதனால் ஏற்படும் உடல் நலக்கேட்டையும் குறிப்பிடுக.

02) ஒரு மாணவர் குழு தயாரித்த உறுஞ்சன்மானியின் அமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது. இந்த உபகரண அமைப்பை வெவ்வேறு இடங்களில் வைத்து வளிக்குமிழி 50 மில்லிலீற்றர் தூரம் செல்வதற்கு செலவாகிய நேரத்தை அளக்க முடிவு செய்த அவர்கள் ஒவ்வொரு இடத்திலும் 5 வசிப்புக்கள் வீதம் பெற்று அவற்றின் இடைப் பெறுமானங்களை பின்வருமாறு அட்டவணைப்படுத்தினார்கள்.

| இடம் | செலவாகிய நேரம் (s) |
|---|---|
| தாவரக் கிளையை 30 நிமிடங்கள் பொலித்தீன் உறையினால் மூடி வைத்த பின்னர் | 70 |
| காற்று வீசும் இடம் | 42 |
| நிழலான இடம் | 57 |
| இருளில் | 62 |
| கடுமையான சூரிய ஒளியில் | 53 |



1) இவ் உபகரணத்தை தயார் செய்யும்போது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் 2 தருக?

2)

a. மேற்படி அட்டவணையின் படி ஆவியுயிர்ப்பு வீதம் உயர்வதில் செல்வாக்குச்செலுத்தும் காரணி யாது?

b. தாவர இலையில் இருந்து நீர் ஆவியுயிர்ப்பு மூலம் வெளியேறுவதை குறைக்கும் பொதுவான காரணி யாது?

c. இப்பரிசோதனைக்காக ஒரே இடத்தில் 5 வாசிப்புக்கள் பெறப்பட்டதன் காரணம் யாது?

d. கிடைத்த வாசிப்பு பெறுமானங்கள் வேறுபடுவதற்கான காரணத்தை தருக?

3) தாவரக் கிளையின்பால் நீர் ஈர்க்கப்படும் வீதத்தை அளப்பதற்காக இந்த அமைப்பை எவ்வாறு பயன்படுத்தலாம் என சுருக்கமாக விளக்குக.

4) வறண்ட சூழலில் வளரும் தாவரங்களில் ஆவியுயிர்ப்பை தவிர்ப்பதற்காக பல்வேறு உத்திகள் உள்ளன.


a. வறண்ட சூழலின் சிப்பியல்பு யாது?

b. வறண்ட சூழல் ஒன்றில் வளரும் தாவரம் ஒன்றைப் பெயரிட்டு ஆவியுயிர்ப்பை குறைப்பதற்காக அத்தாவரத்தில் காணப்படும் உத்தியொன்றை குறிப்பிடுக.

5) தாவரங்களுக்கு ஆவியுயிர்ப்பின் மூலம் கிடைக்கும் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

03) மனித உடலின் சில தொகுதிகளின் பகுதிகளைக் காட்டும் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அப்படங்களில் காட்டப்படும் பகுதிகள் அடங்கியுள்ள தொகுதிகளை கவனத்திற்கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.




| படம் | அது உள்ளடங்கும் தொகுதி | படத்தில் காட்டப்பட்ட இரண்டு பகுதிகள் | பெயரிட்ட உறுப்புக்களின் பிரதான தொழில்கள் |
|---|---|---|---|
| a | | 1. வெளிக்காவு நரம்புமுளை<br>2 .............................. | 1.<br>2. |
| b | | 1. ..............................<br>2 .............................. | 1.<br>2. சதையச் சாற்றை சுரத்தல் |
| c | சிறுநீரத் தொகுதி | 1..............................<br>2.............................. | 1.<br>2. |
| d | | 1. சுவாசச் சிறுகுழாய்<br>2.............................. | 1.<br>2. |

2)

a. மனித உடலின் தொகுதிகளுக்கு இடையே இயைபாக்கம் காணப்படுகின்றது. இயைபாக்கம் என்றால் என்ன?

b. உடலின் நீர்ச்சமநிலையைப் பேணுவதற்கு உதவும் தொகுதி மேற்குறிப்பிட்ட வற்றுள் எது?

..............................................................................................

3)

a. இவற்றுள் ஒரு தொகுதியைச் சேர்ந்த ஓர் உறுப்பு வீங்குவது "கழனி" எனப்படும். அத்தொகுதி எது?

..............................................................................................

b. "கழழை" ஏற்படுவது அம்மனிதனின் ஒரு கனியுப்பு குறைபாட்டாலேயே அகும். அவ் கனியுப்பின் பயன் எது?

..............................................................................................

c. இவ் நோய் நிலைமைக்கு உள்ளாகியுள்ள ஒருவருக்கு நீர் கூறும் பரிகார நடவடிக்கை ஒன்று தருக?

..............................................................................................

04)

1) a. விலங்குகளில் குருதிச்சுற்றோட்டத் தொகுதியின் ஒட்டுமொத்தமான தொழில் யாது?

..............................................................................................

b. விலங்குகளில் சுற்றோட்ட தொகுதியின் மிகமுக்கியமான பகுதிகளை - அம்சங்களைத் தருக?

..............................................................................................

2) a. மனிதனில் காணப்படும் குருதிச்சுற்றோட்டத் தொகுதி எது?

..............................................................................................

b. அதன் சிறப்பியல்புகள் 2 தருக?

..............................................................................................

3) a. குருதித் திரவவிழையம் என்பது யாது?


..............................................................................................

டி. குருதித் திரவவிழையத்தின் பிரதான கூறு யாது?

..............................................................................................

# காணாமல் போன அனேகர் இப்போது வெளிநாடுகளில்

## கோத்தாபய பரபரப்புத் தகவல்



போரின் போது காணாமற் போனவர்களாகப் பட்டியலிடப் பட்டுள்ள பலர் வெளிநாடுகளில் புதிய அடையாளத்துடன் வாழ் வதாக பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

இவ்வாறு காணாமற்போன தாகப் பட்டியலிடப்பட்ட ஒரு வரை கனடா நாடு கடத்தியுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக நாடுகடத்தப்பட்ட வரின் தாயார், போர் முடிவுக்கு வந்த பின்னர் தனது மகன் எங்கே என்று தனக்குத் தெரியவில்லை என்று கூறியிருந்தார்.

இது ஒன்றும் தனித்ததான ஒரு சம்பவம் அல்ல. இங்கே காணாமற்போனதாக அறிவிக கப்பட்ட பெரும் எண்ணிக்கை யானவர்கள் பல்வேறு நாடுக ளில் வாழ்கிறார்கள். அவர்களில் சிலர் இங்கு தீவிரவாத குற்றச் சாட்டுகளை எதிர்கொள்பவர்கள்.

சில வெளிநாட்டு அரசாங் கங்கள், எம்முடன் ஒத்துழைக்க விரும்பவில்லை.

போதிய பாதுகாப்பின்மை யால், வெளிநாடுகளில் அரசி யல் அடைக்கலம் தேடியவர் கள் பொய்யான பெயர்களில் புதிய கடவுச்சீட்டுகளைப் பெற முடிகிறது.

இதற்கு ஒரு நல்ல உதார ணம், ஒருகாலத்தில் ஜே.வி.பி. முன்னணி உறுப்பினராக இரு ந்த பிறேம்குமார் குணரட்ணத் துக்கு வேறோரு பெயரில் கட வுச்சீட்டு வழங்கப்பட்டுள்ள தைக் குறிப்பிடலாம்.

வவுனியா மருத்துவமனை யில் பாதுகாப்புக்கு மத்தியில் சிகிச்சை பெற்று வந்த போது சிலர், வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

2009 மே மாதம் போர் முடி வுக்கு வந்தவுடன் நிலவிய குழப பமான சூழலைப் பயன்படுத்தி, வவுனியா மருத்துவமனையில் இருந்து புலிகள் தப்பிச் சென்று ள்ளனர்.

இவ்வாறு தப்பிச்சென்ற வர்களில் பலர் விடுதலைப் புலி களின் முக்கியமான போராளிகள்.

வெளிநாடுகளில் தங்கி யுள்ள அவர்களிடம் விசாரணை நடத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந் தன. சட்டவிரோத குடியேற்றங் கள் தொடர்பான விசாரணை நட த்த பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கம் கோரிக்கைகளை விடுத்தபோதிலும், அதற்கு வெளி நாட்டு அரசாங்கங்கள் ஒத்தழைக்க மறுத்துவிட்டன எனறும் அவர் மேலும் கூறியுள்ளார.



யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுகொண்டிருந்த ரக் வாகனம் வேகக கட்டுப்பாட்டை இழந்து நாவற்குழிப் பாலத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளாகியிருப்பதைக் காணலாம்.(51)

# ஆந்திரா கல்வித்துறையினர் அரியாலைப் பகுதிக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து ஆந் திரா மாநிலத்தை சேர்ந்த எழுத்தாளர்கள், சட்டத்தரணி கள், ஆங்கில மொழி பெயர்பா ளர்கள், கல்வி புத்தி ஜீவிகள் கொண்ட குழு யாழ்ப்பாணம் அரியாலை நாவலடி கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டனர்.

அவர்களை நல்லூர் பிரதேச சபையின் எதிர்கட்சி தலைவரும் ஈ.பி.டீ.பி. யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமாகிய அம்பலம் இரவீந்திரதாசன் வரவேற்றார். இந் நிகழ்வில் இந்திய துணை தூதுவர் ஸ்ரீகாந் , நல்லூர் உதவி பிரதேச செயலர் சுபாஜினி, நல் லூர் பிரதேச சபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேசா மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்திய வீட்டுத்திட்டத்தை பார்வையிட்ட னர், பொதுமக்களிடம் இந்திய வீட்டுத்திட்ட முன்னேற்றம் பற்றி கலந்துரையாடினர்.

## சைவப்பிரகாச வித்தியாலய வீதிக்கு விமோசனம் எப்போது?

(வரணி)

யாழ். வரணி வடக்கு சைவப பிரகாச வித்தியாலய வீதி மிக மோசமான நிலையில் காணப் படுகின்றது. கோடை காலம் தூசி படிந்த நிலையிலும் மாரி காலத் தில் நீர் நிறைந்தும் காணப்படு கின்றது.

இவ்வீதி மாசேரிக்குச் செல் லும் மிக முக்கிய வீதியாகும். இவ்வீதியில் பாடசாலை, முன் பள்ளி, கிராம அலுவலர் ஆகிய முக்கிய இடங்கள் அமைந்துள்ளன.

எனவே இவ்வீதியை புனர மைக்கச் சம்பந்தப்பட்டோர் நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின் றனர். (150)

## மரணச் செலவிற்கு 10 ஆயிரம் ரூபா உதவி

(வரணி)

வரணி நாவற்காட்டைச் சேர்ந்த க.யோகராசா அண் மையில் இயற்கை மரணம டைந்ததை அடுத்து அவர் வறுமை நிலையைக் கருத் தில் கொண்டு மாசேரியைச் சேர்ந்தவர் அவரது இறுதிக் கிரியைக்கு சமூக ஆர்வலர் ஒருவரால் பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

மரணமடைந்தவர் பல வரு டங்களாக சிறுநீரக நோயி னால் பாதிக்கப்பட்டு தனிமை யில் வாழ்ந்த நிலையில் அண் மையில் காலமானார்.

இவரது குடும்பம் பிரிவில் இருப்பதை அறிந்த சமூக சேவை அக்கறையுடைய ஒரு வர் பத்தாயிரம் ரூபாவை வழங்கியுள்ளார. (150)

## தென்மராட்சி விவசாயிகள் உழவுத்தொழில் ஆரம்பம்



தென்மராட்சிப் பகுதியில் அண்மையில் பெய்த மழையை அடுத்து விவசாயிகள் தமது விளை நிலங்களை உழுது வருகின்றனர். இந்த வருடம் பரு வமழை காலம் கடந்த நிலை யில் பெய்ததால் விவசாயிகள் தமது வயல் நிலங்களைப் பயன் படுத்த முடியாமலிருந்தது.

இந்நிலையில் தற்போதைய மழைச் சூழலைப் பயன்படுத்தி மிகவும் மகிழ்வோடு விவசாயி கள் உழவில் கோலாகலமாக ஈடுபட்டுள்ளனர். அதேவேளை அடுத்த மாதம் தாழ்ந்த நிலப்பிர தேசப் பகுதிகள் நெல் விதை ப்பு ஆரம்பமாகும் என்பது குறிப் பிடத்தக்கது. (150)

## யாழ். – பருத்தித்துறை வீதியில் வடிகால் பகுதிகள் சீரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை வீதி யானது காப்பெற் போடப்பட்டு வரும் வேளையில் அவ் வீதிக ளின் வடிகால் பகுதிகள் கடந்த சில நாட்களாக மண் பரவப் பட்டு இயந்திரத்தின் மூலம் புன ரமைப்பு வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

நீர்வேலி, சிறுப்பிட்டி, புத் தூர் போன்ற பகுதிகளின் வீதி வடிகால் பகுதிகளே தற்போது துரிதமாக நடைபெற்று வருகின் றது.

இதனால் போக்குவரத்துச் செய்வதில் சிரமம் ஏற்படாது அத்துடன் பாதசாரிகளும் இவ் வீதிக்கான்களூடாக தமது பய ணங்களை மேற்கொள்வதற்கு இது வசதியாக அமையும். வீதி விபத்துக்கள் ஏற்படுவதும் இத னால் தவிர்க்கப்படும். (85)

## செயலிழந்து போனது ஐக்கிய தேசியக் கட்சி


(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிடம் திட்டம் ஒன்று உள்ளதா? எதிர்க் கட்சிக்கு திட்டம் ஒன்று உள் ளதா? இன்று எதிர்க்கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் களை தக்கவைத்துக்கொள்ள முடியுமாக உள்ளதா? என ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் செய லாளர் மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நாட்டின் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கு ஐக்கிய தேசியக் கட்சி செயற்றிட்ட மொனறை முன்வைத்துள்ளதா? கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி செயலிழந்து போனதே ஒழிய சக்தியடை யவில்லை.

மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. ஐக்கிய தேசி யக் கட்சியும் அதன் தலைமைத் துவமும் மக்கள் ஏற்றுக்கொள் கின்ற வேலைத்திட்டங்களை முன்வைக்காமையால் ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் ஏற் றுக்கொள்ளவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.









வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 19 ஆவது பதவியேற்பு விழாவை லயன் ஏ.செந்தில்லிங்கம் மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், லயன்ஸ் கழகத் தலைவர் எஸ்.பத்மநாதன் தலைமையுரையாற்றுவதையும், பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட லயன்ஸ் கழக மாவட்ட முன்னாள் ஆளுநர் லயன்ஸ் எஸ்.இராகவன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (01)

# சீனப் போர் விமானம் இந்திய எல்லையில் ஊடுருவல்

சீனாவை ஒட்டிய எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியான லடாக்கில் பறக்கும் தட்டு போன்ற பொருள் மீண்டும் பறந்ததை பார்த்ததாக, இந்திய இராணுவ வீரர்கள் தெரிவித்துள்ளார். அவர்கள் இதுகுறித்து ராணுவத் தலைமையகத்துக்கு உடனடியாகத் தகவல் தெரிவித்தனர்.


சீனாவின் எல்லையை ஒட்டிய உயர்ந்த மலைப் பிரதேசமான லடாக்கின் லகான் ஹேல் பகுதியில், கடந்த 4 ஆம் திகதி அடையாளம் தெரியாத பறக்கும் தட்டு போன்ற பொருள் பறந்ததைத் தாங்கள் பார்த்ததாகவும், அது சுமார் 4 மணி நேரம் பறந்ததாகவும் இந்திய இராணுவ வீரர்கள் தெரிவித்தனர்.

ஆனால், பறந்த பொருள் விமானமா என்பது குறித்து தெளிவாகத் தெரியவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும், இந்தச் சம்பவத்தை அடுத்து, சீனாவை ஒட்டியுள்ள எல்லைப் பகுதியில் இந்திய இராணுவ வீரர்கள் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில மாதங்களில் சீனாவின் எல்லையை ஒட்டிய லடாக் பகுதியில் இதுபோன்ற அடையாளம் தெரியாத பொருள் பல தடவை பறந்ததாக, அங்கு முகாமிட்டுள்ள இராணுவ வீரர்கள் தெரிவித்தனர்.

# 500 ஆவது முறையாக சகுரஜிமா எரிமலை வெடிப்பு



ஜப்பானின் ககோஷிமா நகர் அருகே உள்ள 1117 மீற்றர் உயரமுடைய சகுரஜிமா எரிமலை நேற்று முன்தினம் மாலை வெடித்து சிதறியது. சுமார் 5,000 மீற்றர் தூரத்திற்கு மேலே சாம்பலை பீய்ச்சி அடித்தது கண்கவர் ஆட்சியாக அமைந்தது.

இருந்தும் எரிமலை சாம்பல் அந்த நகரின் பெரும்பாலான பகுதியில் பறந்ததால் ரயில், பேருந்து போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது. வாகனங்கள் அனைத்தும் லைட் போட்டு சென்றன. இதிலிருந்து வெளியேறிய எரிமலைக் குழம்பானது ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு வழிந்தோடியது. இந்த ஆண்டில் சகுரஜிமா எரிமலை 500 ஆவது முறையாக நேற்று முன்தினம் வெடித்து சிதறியது குறிப்பிடத்தக்கது.

# சிரியாவில் இரசாயன ஆயுதம் ஐ.நா. ஆய்வாளர்கள் ஆய்வு



சிரிய அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சியின் போது இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவது பற்றி நேரில் ஆய்வு செய்வதற்காக ஐ.நா. ஆய்வாளர்கள் குழு சென்றுள்ளது.

20 பேர் கொண்ட ஆய்வு குழுவினர் மற்றும் 10 உதவியாளர்கள் டமாஸ்கஸ் சென்றுள்ளனர்.

அங்குள்ள 5 நட்சத்திர விடுதியில் தங்கியுள்ள அவர்கள் செய்தியாளர்கள் மற்றும் புகைப்பட நிபுணர்களை சந்திக்க மறுத்துவிட்டனர்.

முன்னதாக சிரியாவின் துணை வெளியுறவு அமைச்சர் பைசல் மெக்டாட் செய்தியாளர்களிடம் கூறும்போது, ஐ.நா. ஆய்வு குழுவுக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பு கொடுப்போம் என்றார்.

சிரியாவில் உள்ள கனல்-அசல் நகரின் புறநகர்ப் பகுதியான அலெப்போவில் கிளர்ச்சியாளர்கள் கடந்த மார்ச் 19 ஆம் திகதி இரசாயன ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியதாக அதிபர் பஷார் ஆசாத் குற்றம் சாட்டியிருந்தார்.

அந்த இடம் மற்றும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ள வேறு 2 இடங்களிலும் ஐ.நா. குழுவினர் ஆய்வு நடத்துவார்கள்.

# நடிகர் பெரியார்தாசன் மரணம் கண் – உடல் தானம்



தமிழ் சினிமாவின் நடிகரும், சிறந்த பேராசிரியருமான பெரியார்தாசன் உடல் நலக்குறைவால் உயிரிழந்துள்ளார்.

பாரதிராஜாவின் "கருத்தம்மா", "காதலர் தினம்" உள்பட பல்வேறு தமிழ் திரைப் படங்களில் நடித்தவர் பெரியார்தாசன்.

இவர் சென்னை பச்சையப்பா கல்லூரியில் 38 ஆண்டுகள் பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். 15 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்த இவர் பட்டிமன்றம், கருத்தரங்குகளில் பங்கேற்று வந்தார்.

ம.தி.மு.க. நிர்வாகியான இவர் அந்த கட்சியின் உயர் நிலைக் குழு உறுப்பினராக இருந்தார்.

கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டார். கல்லீரல் கோளாறு காரணமாக குளோபல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் நள்ளிரவு 1.25 மணிக்கு மரணம் அடைந்தார். பெரியார்தாசன் உயிருடன் இருக்கும் போதே தனது கண்களைத் தானம் செய்திருந்தார். அவர் மரணம் அடைந்த தகவல் கிடைத்ததும் சங்கர நேதராலயா மருத்துவ குழுவினர் அவரது கண்களை தானமாகப் பெற்றுக்கொண்டனர்.

அதே போல் பெரியார்தாசன் விருப்பப்படி அவரது உடலும் அரசு மருத்துவ கல்லூரிக்கு தானமாக வழங்கப்பட இருப்பதாக அவரது மூத்தமகன் வளவன் தெரிவித்துள்ளார்.

# காங்கிரஸ் அரசாங்கத்தால் இந்தியா 100 வருட பின்னடைவு

நாட்டை ஆண்டு வரும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தவறான கொள்கைகளால் நாட்டை பின்னோக்கி தள்ளிவிட்டதாக பாரதீய ஜனதா குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து பாரதீய ஜனதா துணைத்தலைவர் முக்தர் அப்பாஸ் நக்வி மேலும் தெரிவித்துள்ளதாவது, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் தவறான 10 வருட ஆட்சியானது நாட்டை 100 வருடம் பின்னோக்கி தள்ளிவிட்டு இருக்கிறது. நாங்கள் உலகில் சிறந்தது என்று சொல்வது வழக்கம். ஆனால், இப்பொழுது உலகில் மிகவும் பின் தங்கிய என்று அது மாறியிருக்கிறது.

நாடு மிகப்பெரிய பொருளாதாரப் பஞ்சத்தைச் சந்தித்து வருகிறது. காங்கிரஸ் நாட்டின் மிகப்பெரிய அரசியல் பெருந்துயரமாக மாறியிருக்கிறது. ரூபாயின் மதிப்பு நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறது. பொருளாதார உலகமயமாக்கல் உலகக்கடலில் திருப்பி விடப்பட்டிருக்கிறது. பாரதீய ஜனதா கட்சியினர் நாட்டை தவறான பாதையில் கொண்டு செல்லும் காங்கிரஸ் அரசிற்கு முடிவுகட்ட ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

மோடி குஜராத் மாநிலத்தின் ஆட்சியின் அதிகாரத்திற்கு மட்டும் வரவில்லை. அவர் குஜராத் மாநிலத்தில் ஒரு முறையான மாற்றத்தையும் கொண்டு வந்து இருக்கிறார். மோடியின் பாதையில் உள்ள முட்கள் காங்கிரசின் சவப்பெட்டிக்கு ஒரு ஆணியாக இருக்கும் என்பதை நிரூபிக்கும் என குறிப்பிட்டார்.

# ஆரோக்கியமாக வாழும் ஆதிவாசி 123 வயது மனிதன்



பொலிவியா நாட்டில் ஆதிவாசி மனிதன் ஒருவர் 123 வயதுடன் வாழ்ந்து வருவதாக அந்நாட்டு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

பொலிவியாவின் பிரேஸ்குயா என்ற மலைப்பிரதேசத்தில் கார்னிலோ புளோரஸ் லாவுரா என்பவர் வாழ்ந்து வருகிறார்.

கடந்த 1890 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதி பிறந்த கார்னிலோவுக்கு, 3 பிள்ளைகள், 16 பேரன் - பேத்திகள், 39 கொள்ளுப்பேரன் - பேத்திகள் இருக்கிறார்கள்.

பற்களை இழந்தாலும் கூட நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படும் கார்னிலோ, எவ்வித உதவியும் இன்றி வெகுதூரம் நடக்கிறார்.

இவருடைய நீண்டகால இரகசியம் பற்றி கூறுகையில், நரி, கீரி இறைச்சியை அதிகம் விரும்பி சாப்பிடுவது, நீண்டதூரம் நடப்பதுடன்,

மேலும் புரதசத்துள்ள தானியங்கள் மற்றும் அவ்வப்போது பன்றி, ஆட்டு இறைச்சி உண்பேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இவருக்கு பிறந்தநாள் சான்று இல்லை என்பதால், வெறும் வாய்மொழி தகவல் மூலம் கின்னஸ் சாதனைக்கு பரிந்துரை செய்துள்ளனர்.

# 4 நாட்களில் 900 பேர் பலி எகிப்தில் தொடரும் கலவரம்



எகிப்தில் முன்னாள் அதிபர் முகமது முர்சி இராணுவ புரட்சி மூலம் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அந்த போராட்டம் கலவரமாக மாறியுள்ளது. கலவரத்தை அடக்க இராணுவம் தாக்கியதில் ஏராளமானவர்கள் பலியாகி உள்ளனர். நேற்று முன்தினம் 6 பிரிவாக பேரணி நடத்தப்பட்டது. பின்னர் அவர்கள் ஹெலியோ பொலிஷ் பகுதியில் உள்ள ரோஸி சதுக்கத்தில் திரண்டனர். அங்கு இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக கோஷமிட்டனர். இதனால் பதட்டமும், பரபரப்பும் ஏற்பட்டது.

இதையே போராட்டத்தில் ஈடுபட்ட சகோதரத்துவ கட்சியை சேர்ந்த 612 பேர் அபு பால் சிறைக்கு பலத்த பாதுகாப்புடன் வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டனர்.

அப்போது, ஒரு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டவர்கள் போலீஸ் அதிகாரியை தாக்கி விட்டு தப்பி ஓட முயன்றனர். உடனே, அவர்கள் மீது பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். அதில் மூச்சுதிணறி 36 பேர் பலியாகினர்.

இதன் மூலம் கடந்த 4 நாட்களில் மட்டும் கலவரத்தில் பலியானோரின் எண்ணிக்கை 900 ஆக உயர்ந்துள்ளது. இருந்தும் அங்கு இன்னும் கலவரம் ஓய்ந்தபாடில்லை.

# யாழ்ப்பாண இசைக்கலைஞர்களுக்கு இந்திய நிபுணர்களின் பயிலரங்கு

## இந்தியத் துணைத் தூதரகம் ஏற்பாடு




(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் தெய்வீக சுகானுபவம் - II எதிர்வரும் செப்ரெம்பர் 4 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்திய இசை மற்றும் நடனக் குழுக்கள் பங்குகொள்ளும் இந்த நிகழ்வு குறித்த பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்று யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தில் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்திய இலங்கை அறக்கட்டளை அமையத்தின் (India-Sri Lanka Foundation) ஆதரவுடன் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமும் வடமாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சும் மற்றும் சுகானுபவா விழாக்குழு சென்னையும் இணைந்து தெய்வீக சுகானுபவம் II - 2013 நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது.

இந்தக் கலாசார நிகழ்வானது, நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தின் சமகாலத்தில் நிகழும் திருவிழாவை ஒட்டி சென்னை சுகானுபவா விழாக்குழுவின் ஒருங்கிணைப்புடன் புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகர் திருமதி. சுதா ரகுநாதன், பரதநாட்டிய கலைஞர் செல்வி. லீலா சாம்ஸன் மற்றும் கர்நாடக சங்கீதக் கலைஞர் ரி.எம்.கிருஷ்ணா ஆகியோரைக் கொண்ட இந்திய இசை மற்றும் நடனக் குழுக்கள் இசை நடன நிகழ்வுகளை நடத்தவுள்ளன. இப்பிரபல கலைஞர்கள் தாம் யாழ்ப்பாணத்தில் தங்கவுள்ள காலத்தில் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் குரலிசை, நடனத் துறைகளில் ஆர்வமுள்ள ஏனையோருக்கும் பயிலரங்குகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 4ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் செல்வி லீலா சாம்ஸனின் பரத நாட்டியப் பயிற்சிப்பட்டறை நிகழ்வு நடைபெறவுள்ளது. அன்றையதினம் மாலை 6.30 மணிக்கு யாழ்.சங்கிலியன் பூங்காவில் விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் செல்வி லீலா சாம்ஸனின் பரதநாட்டிய நிகழ்வு நடைபெறவுள்ளது.

அத்துடன் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கர்நாடக இசைக்கலைஞர் திருமதி சுதா ரகுநாதனின் பயிற்சிப் பட்டறை நிகழ்வு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 6.00 மணிக்கு சங்கிலியன் பூங்காப் பகுதியில் கர்நாடக இசைக் கலைஞர் சுதா ரகுநாதனின் கர்நாடக இசைச் கச்சேரி இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தாளவாத்திய இசைப் பயிற்சிப் பட்டறை நிகழ்வும் நடைபெற ஒழுங்குள் செய்யப்பட்டிருப்பதாகவும் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார். இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு இன்புறுமாறு யாழ்ப்பாண மக்களை அவர் மேலும் கேட்டுள்ளார். (பா)

## உள்நாட்டு...

நேற்றையதினம் நுவரெலியாவில் புதிய மாநகர சபை காரியாலயத்தையும் கிரகரி வாவியின் இரண்டாம் கட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தையும் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

வடக்கு, கிழக்கு தெற்கு மலையகம் என்ற வேறுபாடு இல்லாமல் இலங்கையின் அனைத்து பகுதிகளுக்கும் சமமான அபிவிருத்தி வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். எமது நாட்டில் ஒரு சர்வதேச விமானநிலையமே இருந்தது. நாம் புதிதாக அமைத்துள்ள விமான நிலையத்துடன் அது இரண்டாக மாறியுள்ளது. இது தொடர்பாகப் பலர் விமர்சனங்களை முன்வைத்தாலும் நாம் தூர நோக்குட னேயே செயற்பட்டு வருகின்றோம்.

வடக்கில் இருப்பவர்கள் பிரச்சினைகளை கனடாவிலும், இந்தியா உட்பட வெளிநாடுகளில் சென்று பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இதனால் எதுவும் நடக்காது. இது எமது உள்நாட்டுப் பிரச்சினை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பேசுவதன் மூலமே தீர்வு காணமுடியும். இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

பவனில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ராஜபக்ஷ ஆட்சியில் தற்போது பாதுகாப்பாக இருப்பதாக ஈழத் தமிழர்கள் கூறுகின்றனர்.

மேலும் இலங்கையை நட்பு நாடாகக் கருத வேண்டாம் என்றால் இலங்கைத் தமிழர்கள் நலன் குறித்து யாரிடம் பேச வேண்டும் என்பதை தமிழக அரசியற் கட்சிகள் ஒருமனதாகத் தெரிவித்தால் மத்திய அரசை வலியுறுத்த காங்கிரஸ் கட்சி தயாராக உள்ளது.

இலங்கை தமிழர் நலனைக் காப்பதில் இந்திய அரசும், காங்கிரஸும் எப்போதும் துணை நிற்கிறது. அங்குள்ள தமிழர்கள் நலனுக்காக மத்திய அரசு 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்துள்ளது என்றார்.

## காணாமற்போன....

அவரது சகோதரி கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில், குறித்த சிறுவனை நேற்று முன்தினம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வைத்து மீட்டுள்ளதாக சிறுவனின் சகோதரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்திற்கு தகவல் தெரிவித்ததுடன், முறைப்பாட்டினையும் மீளப்பெற்றுக் கொண்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (25)

## கொமன்வெல்த்...

இலங்கையைத் தமிழகம் எதிரி நாடாகக் கருதுகிறது என்றார்.

இதே கோரிக்கையை தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியும் வலியுறுத்தினார். இதுதொடர்பாக, தி.மு.க. தலைவர் கருணாநிதி மேற்கொண்ட முயற்சிகளை எடுத்துக் கூறிய அவர், கொமன் வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்குமாறு சர்வதேச சமூகத்தை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும் என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர், இலங்கையில் நடைபெறும் கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது, மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்ளக்கூடாது என்று தி.மு.க. மீண்டும் கேட்டுக் கொள்கிறது. கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்பதில் இருந்து விலகி இருக்குமாறு சர்வதேச சமுதாயத்தையும் கேட்டுக் கொள்கிறோம். சர்வதேச அழுத்தம் காரணமாக தற்போதைய நிலையில் மாநாடு நடைபெறும் இடத்தை மாற்ற முடியாது என்றாலும் குறைந்தபட்சம் இந்தியா அதில் பங்கேற்கக்கூடாது என்றார்.

## மூன்றாம்...

வரன் குறிப்பிட்டது போன்று எந்தவொரு புதிய போர் குறித்தும் அரசாங்கம் அறியவில்லை.

அவர் எச்சரித்த புதிய போர் என்னவென்று விளக்கமளிக்க வேண்டும். 2004 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வராமல் போயிருந்தாலும், அதற்குப் பின்னர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படாதிருந்தால், இன்று வடக்கில் தனி ஈழம் உருவாகி இருக்கும். வடக்கில் அரச தலைவராக வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்திருப்பார். இலங்கை இரண்டு நாடுகளாக பிளவுபட்டிருக்கும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# 15 வயதுச் சிறுமி மீது வன்புணர்வு சந்தேக நபர் விளக்கமறியலில்

மகிந்தபுரம் ரெட்பானா, விசுவமடுப்பகுதியில் 15 வருடம் 4 மாதம் நிரம்பிய சிறுமி ஒருத்தியை கடத்திச் சென்று வன்புணர்விற்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் 18 வயது இளைஞர் ஒருவரை மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் யாழ்ப்பாண பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், பெற்றோருக்குத் தெரியாமல் குறித்த சிறுமியுடன் பழகி அவரைக் கடத்திச் சென்று வன்புணர்விற்கு உட்படுத்தி விட்டுச் சென்றுவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சிறுமி தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சிறுமி தொடர்பான வைத்திய அறிக்கையை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (170)

## 13 இல் கை....

என இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு செய்தியாளர் ஒருவரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்தியா சென்றுள்ள நிலையில், இந்தியப் பிரதமர், இந்திய வெளியுறவுச் செயலர் ஆகியோர் இவ்விடயம் குறித்து இந்திய நிலைப்பாட்டை எடுத்து விளக்குவார்கள்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் கால நிலைமை குறித்து நாம் அவதானித்து வருகின்றோம். இந்தத் தேர்தல் தொடர்பாக வன்முறைகள் ஏதாவது ஏற்பட்டால் அதனைத் தடுக்கவும், சுமுக நிலையை ஏற்படுத்தவும் தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (பா)

## 13 ஐ பலவீனமாக்கும்...

தேர்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்தப்படவுள்ளது குறித்து மன்மோகன் சிங் மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

இது நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் என்று குறிப்பிட்ட அவர், தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், நம்பகமான முறையிலும் நடத்தப்படும் என்றும் தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில், 9 கட்சிகள் போட்டியிடுவதாகவும், 350 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளதாகவும் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், தேர்தல் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாகவும் மன்மோகன்சிங்கிடம் விபரித்துள்ளார்.

தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்தப்படும் என்று இந்தியப் பிரதமருக்கு, ஜீ.எல்.பீரிஸ் உறுதியளித்துள்ளதுடன், கொமன்வெல்த் மற்றும் சார்க் நாடுகளின் அனைத்துலக கண்காணிப்பாளர்களை அழைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன்போது 13 ஆவது திருத்தச்சட்டத்தை பலவீனப் படுத்துவதில்லை என்பதில் இலங்கை உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும், அது முன்னோக்கிக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் மன் மோகன்சிங் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அத்துடன், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக் குள் நுழைவது குறித்த விவகாரம் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

400-500 வரையிலான படகுகளில் தினமும் ஆயிரத்து 500 பேர் வரையிலான இந்திய மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து வருவதாகவும், அந்த எண்ணிக்கை குறைவதில்லை என்றும் விபரித்த அமைச்சர் பீரிஸ் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நடைமுறைத் தீர்வைக் காண வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இந்த நடைமுறையால் வடக்கு இலங்கையின் தமிழ் மீனவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் தாக்கம் குறித்து விபரித்த பீரிஸ், இந்திய மீனவர்களின் மீன்பிடி முறைகளால் அது மேலும் மோசமடைவதாகவும் கூறினார்.

இந்திய மீனவர்களின் மீன்பிடி முறைகளால் கடற்படுகையின் உயிரியல் தன்மை பாதிக்கப்படுவதாகவும் அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இந்திய மீனவர்கள் பாக்கு நீரிணையுடன் மாத்திரம் தமது நடவடிக்கை களை நிறுத்திக் கொள்ளாமல், கிழக்குக் கடற்பகுதி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் பருத்தித்துறை பகுதிகளுக்கு நெருக்கமாக நுழைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட இலங்கையில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உள்ள காரணத்தால், இந்த நடவடிக்கைகளைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமைக்கு இலங்கை அரசாங்கம் தள்ளப்படுவதாகவும் இலங்கை வெளியுறவு அமைச்சர் இந்தியப் பிரதமரிடம் கூறியுள்ளார்.

இவற்றில் மீனவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்களுக்கு அபராதம் விதிப்பதும் அடங்குவதாக அவர் கூறியுள்ளார்.

எப்படியிருந்த போதிலும், மீனவர்களை நீண்டகாலம் தடுத்து வைத்தோ அல்லது வேறு வழிகளிலோ அவர்களை துன்புறுத்தும், அல்லது அடக்குமுறைக்கு உள்ளாக்கும் நோக்கம் எதுவும் இலங்கைக்கு கிடையாது என்றும் பீரிஸ் கூறியுள்ளார்.

பிரதமருடனான சந்திப்பையடுத்து இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தையும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளதாக டில்லியிலுள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்ட அறிக்கைக்கு தமிழக மீனவர்கள் தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

# மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கு வெற்றி நிச்சயம்

## அமைச்சர் டலஸ் நம்பிக்கை



கருத்துக் கணிப்புகளுக்கு அமைய எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வடமேல் மாகாணத்தில் 19 தொகுதிகளிலும், மத்திய மாகாணத்தில் 21 தொகுதிகளில் 20 தொகுதிகளிலும் வடக்கில் 14 தொகுதிகளில் 4 தொகுதிகளிலும் அரசாங்கம் வெற்றிபெறும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

வடக்கில் உள்ள தேர்தல் தொகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 தொகுதிகளை கைப்பற்றும் ஏனைய 05 தொகுதிகளில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுகிறது.

தேர்தல் நடைபெறவுள்ள மூன்று மாகாணங்களில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் 14 கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன. 54 தொகுதிகளில் 54 கூட்டங்களும் நடத்தப்பட உள்ளன.

சுதந்திரமாகவும் அமைதியான முறையிலும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் சட்ட மீறல்கள் 137 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

தேர்தல் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 137 ஆக அதிகரித்துள்ளதென தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதில் அதிகப்படியாக குருநாகல் மாவட்டத்தில் 43 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளனதென தேர்தல் முறைப்பாட்டு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

வடமாகாணத்தில் தேர்தல் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் இதுவரை 19 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

யாழ். மாவட்டத்திலிருந்து அதிகப்படியாக 10 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் முறைப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 முறைப்பாடுகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதுடன் வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா ஒரு முறைப்பாடு கிடைத்துள்ளதாக அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

வடமாகாண மட்டத்தில் நான்கு முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை மத்திய மாகாணத்தில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் மொத்தமாக 58 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

# இலங்கைக்கு கடனுதவி

உலக வங்கி, இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கியுள்ளது. சலுகை அடிப்படையில் இந்த கடன் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் சுகாதாரத்துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்த கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. பொதுச் சுகாதார முறைமையை வலுப்படுத்தும் நோக்கில் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

தேசிய சுகாதார அபிவித்தித் திட்டத்தை அமுல்படுத்தும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு உலக வங்கி உதவிகளை வழங்கும் என அறிவித்துள்ளது.

# இலங்கை அகதிகள் அறுவர் தலைமன்னாரில் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து வந்த ஆறு அகதிகளை தலைமன்னாரில் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூன்று சிறுவர்களும், பெண் ஒருவரும், இரண்டு ஆண்களும் அடங்குவதாகக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைக்காக அவர்களை பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்கள் ஏற்கனவே இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு சென்றிருந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசின் குற்றச் செயல்களுக்கு பலிக்கடாவாகிறதா ஜே.வி.பி.

## கேட்கிறார் விஜித ஹேரத் எம்.பி.



அரசாங்கம் செய்யும் குற்றச் செயல்களுக்கு ஜே.வி.பி. மீது பழிசுமத்துவதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. குற்றவாளிகளிடமே பரிசீலனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசாங்கம் பணித்துள்ளது. தவறிழைத்த இராணுவத்தினரே இன்று வெலிவேரிய சம்பவம் தொடர்பில் பரிசீலனை மேற்கொள்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அரசாங்கத்திற்கு எதிரான அறிக்கையினையே சமர்ப்பிப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி.யின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சாட்சிகள் அச்சுறுத்தலா? முற்றாக மறுக்கும் இராணுவம்

வெலிவேரிய சம்பவம் தொடர்பாக இராணுவத்தினர் சாட்சிகளை அச்சுறுத்தியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிக சூரிய தெரிவித்துள்ளார். நியாயமான முறையில் விசாரணை நடாத்தும் நோக்கில் சாட்சியங்களிட மிருந்து தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியமளிப்பதற்காக ஊடகங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதே வேளை, சம்பவத்தில் தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களை இராணுவ முகாமிற்கு அழைத்து விசாரணை நடாத்து வது ஊடகவியலாளர்களை அச் சுறுத்தும் செயற்பாடாகவே கருதப்பட வேண்டுமென சுதந்திர ஊடக அமைப்பின் அழைப்பாளார் சுனில் ஜயசேர தெரிவித்துள்ளார்.

# திருமலை மாணவர் கொலை சந்தேகநபர்களின் பிணை நிராகரிப்பு

(கொழும்பு)

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டில் ஐந்து மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழககின் சந்தேக நபர்களான விசேட அதிரடிப்படையினரின் பிணை மனுவை நிராகரித்த நீதவான் 12 பேருக்குமான விளக்கமறியலையும் நீடித்துள்ளார்.

குறித்த 12 பேரையும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகபர்கள் நேற்று திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே பதில் நீதிவான் செ.சசிதரன் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

அதேவேளை மாணவர் படுகொலை தொடர்பான வழக்கு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு தொடர்பான [illegible] சியங்கள் செப்ரெம்பர் 9 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை பதிவு செய்யப்படவும் உள்ளன.

இவ் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அரச தரப்பில் தோற்ற வேண்டிய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் எவரும் மன்றில் சமூகமளித்திருக்கவில்லை.

இதனை நீதவானுக்கு சுட்டிக் காட்டிய எதிர்த்தரப்பு சட்டத்தரணி சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்குமாறு நீதவானிடம் கோரிக்கை விடுத்தார். எனினும் இக்கோரிக்கை நீதவான் நிராகரித்தார்.

விசேட அதிரடிப்படையினர் தரப்பில் தென் மாகாணசபையின் உறுப்பினரும் சட்டத்தரணியுமான அஜித் பிரசங்க மன்றில் ஆஜராகியிருந்தார்.

# ரயில் பாதை பொருட்களை விற்பனை செய்தவர் கைது

புகையிரத பாதை நிர்மாணப் பொருட்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவரை கைதுசெய்துள்ளதாக யாழ். சிறுகுற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யு. எல். விக்கிரமராச்சி நேற்று தெரிவித்தார்.

உரும்பிராய் பகுதியில் உள்ள சீன புகையிரத ஒப்பந்த நிறுவனத்திடம் புகையிரத பாதை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்றை ஒப்பந்தக்காரரொருவர் மேற்கொண்டுள்ளார்.

குறித்த ஒப்பந்தக்காரர் மற்றும் அவரது உதவியாளர் இருவரும் இணைந்து புகையிரத பாதை நிர்மாணிப்பு பொருட்களை ஒழித்து வைத்ததுடன் சுமார் 64,360 ரூபா பெறுமதியான ரயில் தண்டவாளங்கள் மற்றும் ஏனைய பொருட்களை வேறு நபர்களிடம் விற்று 18 ஆயிரம் ரூபா காசு பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக சீன புகையிரத நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, சீன புகையிரத நிறுவனத்தின் பொறியியலாளர் யாழ். சிறுகுற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் தென்பகுதியைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர் ஒருவரும் அவரது உதவியாளரு[illegible]ம் கைது செய்யப்பட்டுள்ளனர். (25)


## பத்திரிகை மடிப்பவர்கள் தேவை

**பத்திரிகை மடிக்கும் வேலையில் முன் அனுபவம் உள்ள, துடிப்பான வேலையாட்கள் விண்ணப்பிக்கலாம். யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.**

தினமுரசு,
இல. 373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (இ)

## வேலை வாய்ப்பு

பதவி :- உழவு இயந்திர மேற்பார்வையாளர்
கல்வித் தகைமை :- க.பொ.த. உயர்தரம்
வாகன மேற்பார்வை தொடர்பாக 5 வருட முன் அனுபவம் மற்றும் வாகன திருத்தம் தொடர்பான கல்விச் சான்றிதழ்கள்
(வடமராட்சி பிரதேசத்திற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
தகைமைச் சான்றிதழ்களுடன் 23.08.2013 காலை 10.30 மணிக்கு நேரில் சமூகதம் தரவும்.

இல. 70, கோவில் வீதி,
மகேஸ்வரி நிதியம். (C/3000)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.